
www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

1—15 செப்டம்பர் '88
3-20
விலை ரூ: 1-50

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு



## டெலிபோன் ஒட்டுக்கேட்கும் விவகாரம்:

# பகல்வேஷம்போடும் பரிசுத்தங்கள்

www.padippakam.com



# போலிச் சுதந்திரத்தைத் திரைகிழித்து...

ஆகஸ்ட் 15, கத்தியின்றி, ரத்தமின்றி... வெட்கமின்றி காந்தி 'மகான்' வாங்கிதந்த சுதந்திரம்! வழக்கம்போல இந்தமுறையும் அவருடைய வாரிசுகளால் — தேசத் துரோகிகளால் கோலாகலத்துடன் கொண்டாடப்பட்டு வழியனுப்பப் பட்டது!

தேசத் துரோகிகளின் கண்ணைப் பறிக்கும் 'சுதந்திர'தின வாண வேடிக்கைகளுக்கு மத்தியில், விவசாயிகள் விடுதலை முன்னணி, மக்கள் கலை இலக்கியக் கழகம் ஆகிய புரட்சிகர அமைப்புகள் தங்கள் முழு சக்தியையும் குவித்து மாநிலம் தழுவிய ரீதியில் தமிழக மக்களிடம் துரோக சுதந்திரத்தைத் தோலுரித்துக் காட்டின.

இந்திய தாய்த் திருநாட்டின் ஏகப் பெரும்பான்மையான மக்களால் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்பட்ட மாபெரும் தேசபக்த போரை— சுதந்திரப் போராட்ட வீர வரலாற்றை— வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு காட்டிக் கொடுத்து, தேசபக்த போரை கீழறுத்துப் போட்ட துரோகி காந்தி—நேரு தலைமையிலான காங்கிரஸ் கட்சியின் துரோக வரலாற்றை, புரட்சிகர அமைப்புகள் ஒவ்வொரு பக்கமாகப் புரட்டிக் காண்பித்தன.

உத்தம பாளையம் வட்டவிவசாயிகள் விடுதலை முன்னணி பிரச்சாரக்குழுவின் சார்பாக கோம்பை நகரில் போலிச் சுதந்திரத்தை அம்பலப்படுத்தி பொதுக் கூட்டமும், புரட்சிகர கலை நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது. கூட்டத்தில் பொது மக்கள் சுமார் 5000பேர் கலந்து கொண்டுமிகவும் ஆர்வமாக கேட்டனர். புரட்சிகரகலைநிகழ்ச்சியில் குட்டித் தோழர் (9வயது சிறுமி) பாடிய பாடல்கள் மக்களுக்கு உத்வேகத்தை ஊட்டியது போலிக்கம்யூனிஸ்ட் கட்சிகளின் அப்பகுதி ஆதரவாளர்களில் 60 சதவீதத்துக்கும் அதிகமானோர் புரட்சிகர கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு கூட்டத்திற்கு முழுஆதரவு அளித்தனர். பகுதியைச் சேர்ந்த பொது மக்களும், சிறு வியாபாரிகளும் அமைப்புக்கு ரூபாய் 102 நன்கொடை கொடுத்து ஊக்குவித்தனர். மேலும், கூட்டத்திற்கு தேவையான, ஒலி பெருக்கி, பந்தல், மேடைக்கு பதிலாக 'டிராக்டர்' வண்டி முதலியவற்றை பகுதி மக்கள் தனித்தனியாக பொறுப்பேற்று இலவசமாக அமைத்துக்கொடுத்தனர். தோழர் மருதமுத்து தலைமை தாங்க, தோழர் ராஜன் சிறப்புரையாற்றினார். மக்களுக்கு இக்கூட்டம் புது உத்வேகத்தை ஊட்டியது.

ஏறக்குறைய இதே மாதிரியான பொதுக்கூட்டங்களும் புரட்சிகர கலை நிகழ்ச்சிகளும் பல்வேறு பகுதிகளில் சிறப்பாக நடைபெற்றன.

உசிலம்பட்டி விவசாயிகள் விடுதலை முன்னணி சார்பில் தோழர் சி.நல்லுதலைமை தாங்க, தோழர் தனம் மற்றும் தோழர் கே.பி. இராமசாமி சிறப்புரையாற்ற பேரையூர்ரோடு, உசிலம்பட்டியிலும்; மக்கள் கலை இலக்கியக் கழகம் கடலூர் கிளை சார்பில் தோழர் ஜெயன் தலைமை தாங்க, தோழர்கள் இந்திரஜித்து, காளியப்பன் (ம.க.இ.க தஞ்சை கிளை செயலர்) சிறப்புரையாற்ற கடலூர் மஞ்சை நகரிலும்; அதிராம்பட்டினம் புதிய கலாச்சார வாசகர் வட்டம் சார்பில் தோழர் எம். நடராஜன் தலைமை தாங்க, தோழர் வி. சுப்பையன் தொடக்கவுரையாற்ற தோழர் மருதையன் [ம.க.இ.க மாநில செயலர்] சிறப்புரையாற்ற பேருந்து நிலையம், அதிராம்பட்டினத்திலும்; வடலூர்-நெய்வேலி புதியகலாச்சாரம் வாசகர் வட்டம் சார்பில் தோழர் கலைச்சித்தன் தலைமை தாங்க தோழர்காளியப்பன் சிறப்புரையற்ற பேருந்து நிலையம் வடலூரிலும்; பொதுக் கூட்டமும், புரட்சிகர கலை நிகழ்ச்சிகளும் மக்களின் ஆதரவுடன் எழுச்சியுடன் நடத்தப்பட்டன.

மேலும் புதியஜனநாயக வாசகர் வட்டங்கள், மாமல்லபுரம் மற்றும் இராசிபுரம் [ஆத்தூர் வட்டம்] சார்பில் போலிச் சுதந்திரத்தை அம்பலப்படுத்தி கையெழுத்து சுவரொட்டிகளும், பிரசுரங்களும் அப்பகுதிகளில் விநியோகிப்பட்டன.

திருச்சி, தஞ்சை, கோவை, மதுரை, சென்னை முதலியபெரு நகரங்களிலும் போலிச் சுதந்திரத்தை அம்பலப்படுத்தும் பொதுக் கூட்டங்கள், புரட்சிகர கலை நிகழ்ச்சிகள், தெருமுனைக் கூட்டங்கள், சுவரொட்டிகள், பிரசுரங்கள் வடிவிலான பரந்த அளவிலான பிரச்சாரம் கொள்ளப்பட்டன.

பிரச்சாரம் செய்யப்பட்ட இக்கிராமங்களிலும், சிறு சந்தை நகரங்களிலும், பெரு நகரங்களிலும் புரட்சிகர அமைப்புகளால் எடுத்து வைக்கப்பட்ட சுதந்திரப் போராட்ட உண்மை வரலாறு மக்களின் சிந்தனையில் புதிய ஒளியைப் பாய்ச்சி தேசத் துரோகிகள் பற்றி ஒரு புதிய, சரியான மதிப்பீட்டை பதித்திருக்கின்றன.

## அறிவிப்பு

அன்பார்ந்த வாசகத் தோழர்களே,

புதிய ஜனநாயகம் ஜூலை 16—31 இதழில் வெளியான 'குண்டு அரசியலும் கூட்டு அரசியலும் இருண்ட சக்திகள்' என்ற விமர்சனக் கட்டுரைக்கு பதிலளிக்க வந்த கேடயம்—மன ஓசை ஓடுகாலி கும்பல் தனது வழக்கமான பாணியில் பொய்களையும் அவதூறுகளையும் புதிய ஜனநாயகத்தின்மீது வாரி யிறைத்து தனது கேடயம் ஆகஸ்டு இதழில் எழுதியுள்ளது. இவ்விதழில் இடமின்மை காரணமாக, வருமிதழில் இக்கும்பலின் அவதூறு, அண்டப் புளுகு, மழுப்பல்களை தோலுரித்து எழுதுகிறோம்.

—ஆசிரியர் குழு
புதிய ஜனநாயகம்



படிப்பகம்

www.padippakam.com

ுதிய
ஜனநாயகம்

ார்க்சிய-லெனினிய
அரசியல் ஏடு

ன்றாமாண்டு

20

1—15 செப்டம்பர் '88

உள்நாடு
தனி இதழ் : ரூ 1.50
ஆண்டு சந்தா : ரூ. 30

வெளிநாடுகள்
(விமானத் தபாலில்)
ஆண்டு சந்தா : ரூ 170

டைப்புகள் அனுப்பவும்
ற்றும்
னைத்துத் தொடர்புக்கும்

ஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
1, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

# இமாலயப் பேரழிவு!

ஆகஸ்டு 21 அன்று இமயமலை பிராந்தியத்தில் ஏற்பட்ட கொடிய—கடுமையான பூகம்பம் பேரழிவுகளையும், பெரும் துயரையும் ஏற்படுத்தியுள்ளது. பீகார்—நேபாள எல்லையை மையமாகக் கொண்ட பூகம்பம் நேபாள நாட்டின் தராம்பூர், பிராத்நகர் மாவட்டங்களிலும் பீகாரின் தார்பங்கா, முங்கீர், மதுபானி மற்றும் நாலந்தா ஆகிய மாவட்டங்களிலும் பெருமளவு ஆட்சேதங்களையும் பொருட்சேதங்களையும் ஏற்படுத்திவிட்டது.

பின்னிரவு—அதிகாலை அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த மக்களைத் திடீரென்று தாக்கியது பூகம்பம். அப்படியே வீடுகளும் கட்டிடங்களும்இடிந்து நொறுங்கி விழுந்து ஆயிரக்கணக்கான மக்கள் உயிரோடு புதைந்துபோனார்கள். குறைந்தது 3000 பேர் மாண்டு போனார்கள். 50,000 வீடுகள்—கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமாகின என்று வெளிநாட்டு வானொலிகள் கூறுகின்றன. அணைக்கட்டுகளும், ஆற்றங்கரைகளும் உடைந்து போய் பலநூறு கிராமங்களிலும் சிறுநகரங்களிலும் வெள்ளம்புகுந்துள்ளது. மரங்கள் வேரோடு சாய்ந்தும் சாலை, ரெயில் பாலங்கள் தகர்ந்தும், நிலச்சரிவுகள் ஏற்பட்டும் போக்குவரத்து—தகவல் தொடர்பு அனைத்தும் நிலைகுலைந்து போயுள்ளன. எனவே சேதங்களின் அளவு, பேரழிவின் வீச்சு பற்றிய முழு விவரங்களும் தெரியவில்லை. இயல்பு நிலை திரும்பும்போதுதான் எல்லா விவரங்களும் தெரியவரும்.

1934, ஜனவரி 15 அன்று இதே பிராந்தியத்தில் ஏற்பட்ட பூகம்பம் 10700 பேரைக் காவு கொண்டது. பீகாரின் பல வட நகரங்கள் அழிந்து போயின. 54 ஆண்டுகளுக்குப் பிறகு சென்ற மாதம் ஏறக்குறைய அதே அளவு கடுமையான பூகம்பம் ஏற்பட்டுள்ளது. நேபாளம், பீகார் தவிர உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய வடமாநிலங்களிலும், சிக்கிம், மேற்கு வங்காளம், அசாம், மேகாலயா, அருணாசல பிரதேசம் ஆகிய கிழக்கு—வடகிழக்கு மாநிலங்களிலும் இந்த பிராந்தியத்தில் உள்ள டெல்லி, கான்பூர், காசி, பாட்னா, கல்கத்தா போன்ற பல பெரும் நகரங்களிலும் பூடான், வங்கதேசம் ஆகிய அண்டை நாடுகளிலும் இந்த பூமியதிர்ச்சி இருந்தது. ஆனால் தற்செயலாக நேபாளம், பீகார் அளவு அங்கெல்லாம் பேரிழிப்புகள் நிகழவில்லை.

''பூகம்பம் என்பது புயல்—மழை, வறட்சி போன்று இயற்கையின் விளைவு, விபத்து, இயற்கையின் சீற்றம். புயல்—மழை, வறட்சியைக்கூட முன்கூட்டி அறிந்து எச்சரிக்கை நடவடிக்கையும், நிவாரணப் பணிகளும் மேற்கொள்ள முடியும். ஆனால் பூகம்பம் ஏற்படப்போவதை முன்கூட்டி அறியவோ, முன்எச்சரிக்கை நடவடிக்கையோ எடுக்க முடியாது'' என்பதாக பாசிச ராஜீவ் கும்பல் பிரச்சாரம் செய்கிறது. பூகம்பம் ஏற்பட்டபோது பெண்கள் வெளியே ஓடிவந்து சங்குகளை ஊதினார்களாம்—பருவநிலைக் கடவுள் சாந்தமடைந்து தனது சீற்றத்தைத் தணித்துக் கொள்வார் என்கிற நம்பிக்கையில் அப்படிப்பட்ட மூடநிலையிலேயே மக்கள் வாழ்ந்து மடிய வேண்டும்; அப்போதுதான் பொறுப்புக்களைத் தட்டிக் கழித்துத் தப்பித்துக் கொள்ள முடியும் என்று ஆட்சியாளர்கள் கருதுகின்றனர்.

ஆனால் இமயமலைப் பிராந்தியத்தில், ஏறக்குறைய இதே இடத்தில், இதே சமயத்தில், இதே அளவு கடுமையாக ஒரு பூகம்பம் ஏற்படும் என்று 1985ஆம் ஆண்டே பூனாவிலுள்ள அருண் பாபட் என்ற நில அதிர்வு ஆராய்ச்சியாளர் கணித்து ஒருங்கிணைந்த மலை வளர்ச்சிக்கான சர்வதேச மையத்திடம் அறிவித்துள்ளார். இவர் பயன்படுத்திய முறையைக் கொண்டு மெக்சிகோ நாட்டில் 1985ல் ஏற்பட்ட பூகம்பம் பற்றி முன்கூட்டியே கணித்தபடி நடந்தது. மூன்றாண்டுகளுக்கு முன்பு இந்தியா வந்திருந்த ஒருஅமெரிக்க நில அதிர்வு ஆராய்ச்சியாளர் இமயமலை பிராந்தியத்தில் இப்படி ஒரு கடுமையான பூகம்பம் ஏற்படும் என்று எச்சரித்திருந்தார். அதுமட்டுமல்ல, இந்த பூகம்பம் ஏற்படுவதற்கு பதினைந்து நாட்களுக்கு முன்பு அதாவது ஆகஸ்டு 6ந் தேதி வடக்கே ஜம்மு காஷ்மீரிலிருந்து வடகிழக்கே அருணாசலப் பிரதேசம் வரை பல வடக்கு, கிழக்கு, வடகிழக்கு மாநிலங்களிலும் நேபாளம் வங்க தேசம், பர்மா ஆகிய அண்டை நாடுகளிலும் இரு பூமி அதிர்ச்சி அலைகள் எழுந்தன. அப்போது பல இடங்களிலும் நிலச்சரிவுகளும், கட்டிடங்கள் இடிந்து விழ்வதும் ஏற்பட்டன. இம்மாதிரியான பூமி அதிர்ச்சி அலைகள் ஏற்படுமானால் அடுத்து, மிக விரைவிலேயே கடுமையான பூகம்பம் நிச்சயம் ஏற்படும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இருந்தாலும் நிர்வாகம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எதையுமே மேற்கொள்ளவில்லை.

பூகம்பம் ஏற்படும் மையம், நேரம், அதன் கடுமை பற்றி இன்னும் குறிப்பாக அறிய முடியாது என்பதும், முழு அளவிலான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க முடியாது என்பதும் உண்மைதான்! ஆனாலும் கிடைக்கும் கணிப்புகளைக் கொண்டும், பூகம்பம், எரிமலை சீற்றம் ஆகியவை அடிக்கடி நடந்த ஜப்பானிய அனுபவங்களைக் கொண்டும் பல முன்எச்சரிக்கை நடவடிக்கைளை செய்ய முடியும். குறிப்பாக கட்டுமானப் பணிகளையும், போக்கு வரத்து—தகவல் தொடர்பு,

படிப்பகம்

www.padippakam.com



மருத்துவம் உணவு, உடை, தற்காலிகத் தங்குமிடங்கள் போன்றவற்றை அதற்கேற்பத் திட்டமிட முடியும். இப்படிச் செய்வதன் மூலம் சேதங்களைப் பெருமளவு குறைக்கவும், மக்கள்உயிர்களைப் பாதுகாக்கவும் முடியும்.

பூகம்பத்தின் கடுமை மிக அதிகமாக இருந்து தவிர்க்க முடியாத அளவு பல உயிர்—உடமை சேதங்கள் விளைந்தபோதும் அதன்பிறகு தகுந்த, உடனடி நிவாரண — புணர்வாழ்வுப்பணிகளை மேற்கொள்வது அவசியம். 1974இல் பல லட்சம்பேரை சாவு கொண்ட பூகம்பம் வடமேற்கு சீனாவில் ஏற்பட்டது. அப்போது மாவோ தலைமையிலான சீன அரசு மேற்கொண்ட நிவாரண—புணர்வாழ்வு—சீரமைப்புப் பணிகள் உலக மக்களையே பிரமிக்கச் செய்துவிட்டன. ஆனால் இப்போது வெறும் கண்துடைப்பு வேலைகளையே மேற்கொண்டுள்ளது பாசிச ராஜீவ் கும்பல். ஆயிரக்கணக்கில் சாவுகள் நிகழ்ந்தபோதும் சில நூறுபேர்களே மாண்டதாக புளுகுவதன் மூலம் நிவாரண நிதிதரவேண்டிய பொறுப்பைத் தட்டிக்கழிக்கிறது. பிரதமரும் பல மத்திய மாநில மந்திரிகளும் பூகம்பம் பெரிதும் பாதித்த பகுதிகளை நேரில் பார்வையிட்டு நிவாரணப்பணிகளை மேற் கொண்டுள்ளதாகத் தொடர்ந்து புளுகுகிறது.

“இடிபாடுகளுக்கிடையே சிக்கி மாண்டவர்களின் பிணங்களை மக்கள் தாமேமீட்கின்றனர். சாலையோரங்களில் தமதுஉற்றார் உறவினர்களின் பிணங்களைக் கிடத்திக் கொண்டு அழுது புலம்புகிறார்கள். இந்தக் காட்சிகள் இதயத்தைப் பிழிகின்றன. மூன்று நாட்களாகியும் மீட்பு மற்றும் நிவாரணப்பணிகள் எதையும் நிர்வாகம் தொடங்கவில்லை.” என்று நாளேடுகள் எழுதுகின்றன. வறட்சி—பஞ்சம்—பட்டினி, கடுங்குளிர், மழைவெள்ளம், கொள்ளை நோய்கள் ஆகியவற்றுக்கு அடுத்தடுத்துப் பல நூறு பேர்கள் மாண்டனர். சென்றமாதம் பீகாரில் படகு மூழ்கி 500 பேர் அதற்கு முன்பு கேரளத்தில் ரயில் கவிழ்ந்து 400 பேர்; மக்கள்உயிரைஎவ்வளவுஅற்பமாக அதிகாரத்திலிருப்பவர்கள் கருதுகிறார்கள் என்பதற்கு இவையெல்லாம்சாட்சியங்கள். அடிக்கடி தனதுபோக்கை மாற்றிக்கொண்டு பேரழிவுகளை ஏற்படுத்திய மஞ்சள் நதியைக் கட்டுப்படுத்தவும், பூகம்பத்தின் பேரிழப்புகளையும்சமாளிக்கவும்சீனாவிலும் கூட உழைக்கும் மக்களின் சர்வாதிகார அரசு அவசியமாயிருந்தது. அதைப் போன்ற ஒரு புதிய ஜனநாயகஅரசின்கீழ்தான்மக்கள் இயற்கைச் சீற்றங்களில் இருந்தும் தம்மைக் காத்துக் கொள்ளமுடியும்!

## சீரழிவின் விளிம்பில்...

போலிக் கம்யூனிஸ்டுகளால் ‘சோசலிச நாடு’ என்று ஏற்றிப் போற்றப்படும் ரஷியா ஒரு முதலாளித்துவ நாடாக சீரழிந்துவிட்டது என்று நீண்ட காலமாக கம்யூனிசப் புரட்சியாளர்கள் கூறிவருகின்றனர். “அதுவெல்லாம் பொய்! சிஐஏ கைக்கூலிகள் செய்யும் அவதூறு!” என்று புரட்சியாளர்களை இழிவு படுத்தி போலிகள் தமது அணிகளின் காதில் பூ சுற்றி வந்தனர். ஆனால் முதலாளித்துவ நாடுகளில் காணப்படும் சீரழிவும்அராஜகமும் அங்கே தலைவிரித்தாடுவதாக இப்போது ரஷியாவே வெளிப்படையாக ஒப்புக் கொள்ளத் தொடங்கி விட்டது.

“ரஷியாவில் கணக்கில் வராத கள்ளப் பொருளாதாரத்தின் மதிப்பு ஆண்டுக்கு 14.6 கோடி டாலராக உள்ளது. ஆண்டுக்கு 2.4 டாலர் வரை ரஷிய மக்கள் கள்ள மார்க்கெட் பொருட்களுக்காகச் செலவிடுகிறார்கள்” என்று கூறுகிறார் ரஷியாவின் பிரபல பொருளாதார நிபுணரான திருமதி டாட்யானா கோர்யாஜின். ரஷிய தொழிலாளி வர்க்கப் பத்திரிக்கையான ‘ட்ரூட்’—ல் அவர் அளித்த பேட்டி வெளியாகியுள்ளது. ரஷியாவின் கருப்புப் பண பொருளாதாரத்தைப் பற்றி பகிரங்கமாக முதன்முறையாக வெளிவரும் செய்தி இது.

மேலும், அவர் தனது பேட்டியில், “சாதாரண தச்சு வேலையும் கூடலஞ்சம் கொடுத்தால்தான் நடக்கிறது. அன்பளிப்பு கொடுத்தால்தான் மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு முறையாக சிகிச்சையளிக்கப்படுகிறது. சுடுகாட்டில் சவக்குழி தோண்டுவோரின் கையில் பணத்தை திணித்தால்தான் பிணத்தைப் புதைக்க முடியும். இதை அன்றாட வாழ்க்கையில் யாவரும் பார்க்க முடியும்” என்று கூறுகிறார்.

இது ஒருபுறமிருக்க, “அமெரிக்கா அல்லது இத்தாலியைப் போலவே எங்கள் நாட்டிலும் ஏமாற்று பேர்வழிகள், பேட்டை ரவுடிகள், தெருச்சண்டைகள், படுகொலைகள் முதலான அனைத்தும் சர்வசாதாரணமாக நடக்கத் தொடங்கி விட்டன” என்று எழுதுகிறது ரஷிய வாரப் பத்திரிக்கையான “மாஸ்கோ செய்தி.”

“முன்னாள் அதிபர் பிரஷ்னேவின் மகள் கலினாவும், மருமகனும் இச்சமூக விரோத கும்பலுக்குத் தலைமையேற்று வழி நடத்தினர். கலினா சட்டவிரோதமாக நகை வியாபாரம் செய்து வந்தார். நகை விலையேற்றத்தை முன்கூட்டியே அறிந்து ஏராளமாக நகைகளை வாங்கிப் பதுக்கினார். அவரைச் சுற்றி ஒரு பெரிய கிரிமினல் கும்பல் ரகசியமாகச் செயல்பட்டது” என்று அடுக்கிக் கொண்டே போகிறது அந்த ரஷியப் பத்திரிக்கை.

ஆக, அடி முதல் நுனி வரை ரஷிய சமுதாயம் முழுவதிலும் ஏனைய ஏகாதிபத்திய நாடுகளைப் போலவே லஞ்சம், கருப்புப் பணம், கொலை, கொள்ளை, மாஃபியா குண்டர்கள் என்று அனைத்து சமூக விரோத செயல்களும் பரவி சீரழிந்து கிடக்கிறது. இத்தனை ஆண்டுகளாக மூடி மறைத்து வந்த உண்மைகள் இப்போது அவர்கள் வாயாலேயே வெளி வரத் துவங்கிவிட்டன. இன்னமும் எதையாவது சொல்லி ரஷியாவை சோசலிச நாடுதான் என்று நம்ப வைக்க முயலுவார்கள் போலிக் கம்யூனிஸ்டுதலைவர்கள். இனியும் இவர்களின் பித்தலாட்டத்திற்கு ஆமாம்சாமி போட வேண்டுமா? புரட்சிகர அணிகளே, போலிக் கம்யூனிஸ்டு கட்சியை விட்டு வெளியேறுங்கள். கம்யூனிசப் புரட்சியாளர்களின் தலைமையில் அணி திரளுங்கள்!



படிப்பகம்

www.padippakam.com

# ஜியா

## இராணுவ சர்வாதிகாரியின் சாவு இறகைவிட இலேசானது!

அண்டை நாட்டின் அதிபரும் கொடிய ராணுவ சர்வாதிகாரியுமான ஜியா மாண்டு விட்டார். மேலை நாடுகள், குறிப்பாக அமெரிக்க வல்லரசு தெற்காசியாவில் தனது நம்பகமான விசுவாசியை இழந்துவிட்டது. உண்மையில் இது அவர்களுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்புதான். எனவேதான் ஓடோடி வந்து அவரது அருமை பெருமைகளை அள்ளிக் கொட்டி நன்றிக் கடன் செலுத்துகிறார்கள்.

அவர் சதி செய்து கொல்லப்பட்டதாக செய்திகளும் ஊகங்களும் வதந்திகளும் நிலவுகின்றன. ஜியாவும் ராணுவ உயரதிகாரிகளும் பயணம் செய்த விமானத்தில் அவருக்குப்பரிசளிக்கப்பட்ட மாம்பழக் கூடையில் குண்டு வைக்கப்பட்டிருந்தது என்றும், ஆப்கான் கொரில்லாக்களால் ஏவுகணை வீசப்பட்டு விமானம் வெடித்தது என்றும், ஒரு ஹெலிக்காப்டர் மோதியதால் விபத்துநேர்ந்தது என்றும் பலவாறாக செய்திகள் வருகின்றன. ரஷியாவும் ஆப்கான் பொம்மை அரசும் கூட்டாக இச்சதியை அரங்கேற்றியதாகவும் இந்தியாவுக்கும் இதில் பங்குண்டு என்றும் அமெரிக்கப் பத்திரிக்கைகள் எழுதுகின்றன. ரஷியாவோ, தனது விசுவாச அடிவருடியையே குண்டு வைத்துக் கொல்ல அமெரிக்கா சதி செய்திருக்கலாம் என்று புதுக்கரடியை அவிழ்த்து விடுகிறது.

எவ்வாறாயினும் சர்வாதிகாரி ஜியா சதி மூலமாகவே கொல்லப்பட்டுள்ளார்; அன்னியக்கரம் இதில் சம்பந்தப்பட்டுள்ளது என்பதையே பொறுப்பேற்றுள்ள பாக் அதிபரும், ராணுவ அதிகாரிகளும் உறுதிப்படுத்துகின்றனர்.

எவ்வளவு அயோக்கியத்தனங்கள் செய்திருப்பினும், வாழ்நாளில் எதிரியாயிருந்த போதிலும் மாண்டபிறகு ஏற்றிப்போற்றி இரங்கல் செய்தி தெரிவிப்பது என்பது இந்திய ஓட்டுப்பொறுக்கிகள் தேர்ந்தெடுத்துள்ள மரபு. தனக்கும் ஒரு காலத்தில் இது உதவும், பரஸ்பரம் இது அவசியம் என்று அவர்கள் வகுத்துக் கொண்டுள்ளார்கள். இதோடு செத்தவனையெல்லாம் தெய்வமாக்கும் இந்து மதக் கோட்பாடும் சேர்ந்து கொண்டது. அதன்படியே இந்திய அரசு சர்வாதிகாரி ஜியா மாண்டதும் 3 நாட்களை அரசு முறை துக்கநாளாக அறிவித்தது. ரஷிய அடிவருடிகளான போலிக் கம்யூனிஸ்டுகள் தவிர இதர ஓட்டுப்பொறுக்கிகளையும் குடியரசுத் தலைவரையும் கொண்ட ஒரு குழு ஓடிப்போய் அஞ்சலி செலுத்தியது.

ஆனால் ஜியாவின் மரணம் அஞ்சலி செலுத்துவதற்கானதோ அனுதாபப்படுவதற்கானதோ அல்ல. ஜியா ஒரு கொடியராணுவ சர்வாதிகாரி; ராணுவத்துக்குள்ளேயே சிறு கும்பலின் நலன் காக்கும் கொடுங்கோலர். சாதாரண சிறுகுற்றங்களுக்காகக் கூட மக்களை நடுத்தெருவில் நிற்க வைத்து சவுக்கடி கொடுப்பது, உடலுறுப்புகளை வெட்டுவது முதலான கொடிய அடக்குமுறையை ஏவியவர். எதிர்க்கட்சிகளின் செயல்பாடுகளை முடக்கிவைத்தும் முன்னணித் தலைவர்களை சிறையிலிட்டும், வீட்டுக் காவலில் வைத்தும், மோசடித் தேர்தல் நடத்தி தனக்குத்தானே மகுடம் சூட்டிக் கொண்ட சர்வாதிகாரி. மனித உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கும் தென்னாப்பிரிக்க நிறவெறிக் காட்டுமிராண்டி போத்தாவின் தெற்காசியப் பங்காளி!



மேலை நாடுகளின் குறிப்பாக அமெரிக்க வல்லரசின் நம்பகமான விசுவாசிதான் சர்வாதிகாரி ஜியா. அதனாலேயே அவர் பூட்டோவைத் தூக்கிலிட்டபோது மனித உரிமைகளை ராணுவ பூட்சுகளால் மிதிக்கும் சர்வாதிகாரி என்று சித்தரித்த மேலை நாடுகள், பின்னர் அவரைத் தெற்காசியாவின் உற்ற நண்பராக உச்சி முகர்ந்தன.

1979ல் பாகிஸ்தானின்அண்டை நாடான ஆப்கானை ரஷியா ஆக்கிரமித்த பிறகு, ரஷியாவின் திட்டங்களைத் தவிடு பொடியாக்க உற்ற நண்பராகக் கிடைத்த ஜியாவுக்கு ஏராளமான ஆயுதங்களை அள்ளி அள்ளிக் கொடுத்தது அமெரிக்கா. ஜியாவும் இந்தியப் பாசிஸ்டுகளையே விஞ்சும் வண்ணம் கஜானாவைக் காலி செய்து ஆயுதங்களை வாங்கிக் குவித்ததோடு, இந்தியாவோடு போட்டி போட்டுக் கொண்டு அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யவும் முனைந்தார்.

இந்திய ஓட்டுப் பொறுக்கிகள் எவ்வாறு சீன எதிர்ப்பு—பாகிஸ்தான் எதிர்ப்பு பிரச்சாரத்தின் மூலம் தேசிய வெறியூட்டி வருகிறார்களோ அதே வழியில் இந்தியஎதிர்ப்பு, நாட்டைஇஸ்லாமியமயமாக்குவது என்ற கொள்கைகள் மூலம் தேசிய வெறியூட்டி வந்த சர்வாதிகாரிதான் ஜியா. இத்தகைய தேசிய வெறி-மத வெறி—ராணுவ சர்வாதிகாரத்தின் காரணமாகவே அவர் பாக் வரலாற்றிலேயே நீண்ட காலம் ஆளமுடிந்தது.

சர்வாதிகாரி ஜியாவின் மரணம் இந்திய மக்களுக்கோ, பாக் மக்களுக்கோ, எந்த வகையிலும் இழப்பல்ல. இராணுவ சர்வாதிகாரிகளின் மரணம் இறகைவிட இலேசானதுதான். ஆனால் பாக் மக்கள் பெரும் புரட்சியில் இறங்கிராணுவ சர்வாதிகாரத்தை தூக்கியெறியுமுன்னே, ஜியா மாண்டுபோனது புரட்சிகர சக்திகளுக்கு வருத்தமளிக்கக்கூடியது தான். புரட்சிகர சக்திகள் பலம் பெறாதநிலையில், பாகிஸ்தானில் ஜியாவின் மரணத்தைத் தொடர்ந்து ஜனநாயகம் மலருவதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக இல்லை. அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதை உடனடியாக அனுமதிக்கப் போவதுமில்லை. மீண்டும் ராணுவசர்வாதிகாரமோ அல்லது தற்காலிகமாக சில சீர்திருத்தங்களைக் கொண்ட, ராணுவ சர்வாதிகாரத்தின் கீழான சிவிலியன் அரசாங்கமோ நிறுவப்படலாம். அது பாக் மக்களின் மீதான சர்வாதிகார நுகத்தடியை மேலும் அழுத்தவே செய்யும்.

○ மணி

படிப்பகம்

www.padippakam.com



## டெலிபோன் ஒட்டுக் கேட்கும் விவகாரம்:

# பகல்வேஷம் போடும் பரிசுத்தங்கள்

டெலிபோன் ஒட்டுக் கேட்கும் விவகாரம் பல உண்மைகளைப் புலப்படுத்திவிட்டது. நிலவும் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் போலித் தனத்தைப் புரிந்து கொள்வதற்கு நாட்டு மக்களுக்கு இன்னுமொரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது இந்த டெலிபோன் ஒட்டுக் கேட்கும் விவகாரம்.

தனிமனித அந்தரங்கம், தனிமனித சுதந்திரம், ஜனநாயக மற்றும் குடியுரிமை ஆகியவற்றைஉத்தரவாதம் செய்யும் உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடு இந்தியா என்கிற பித்தலாட்டத்தை மீண்டும் ஒருமுறை நொறுக்கிவிட்டது இந்த டெலிபோன் ஒட்டுக் கேட்கும் விவகாரம்.

பதவி வெறிபிடித்த ஓட்டுப் பொறுக்கிகளுக்கு அரசியல் நேர்மை, அரசியல்ஒழுக்கம், அரசியல் இலட்சியம் என்று எதுவும் கிடையாது. மக்களை ஏய்ப்பதற்காக அவ்வப்போது போடும் வேடம் தான் இவை. மற்றபடி தமது பேராசையை நிறைவேற்றிக் கொள்வதற்காக எவ்வளவு கீழ்த்தரமாக வேண்டுமானாலும் போவார்கள். இதை இன்னும் ஒருமுறை எடுத்து காட்டுகிறது இந்த டெலிபோன் ஒட்டுக் கேட்கும் விவகாரம்.

உழைக்கும் மக்களின் பிரதிநிதிகளான புரட்சியாளர்கள் அரசின் உளவுப் படைகளால் சதா காலமும்கண்காணிக்கப்படுகிறார்கள். வேட்டையாடப்படுகிறார்கள் புரட்சியாளர்களின் ஆதரவாளர்கள், நண்பர்கள், அவர்களுடைய குடும்பத்தினர் குழந்தைகள் கூட கண்காணிக்கப்படுகிறார்கள்.வேட்டையாடப்படுகிறார்கள். இதை அறிந்த புரட்சியாளர்கள் தகுந்த எச்சரிக்கையுடன்இரகசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறார்கள்.

ஆனால் அரசின் உளவுப் படை அதோடு நிற்பதில்லை. ஆளும் கட்சியையும் அரசையும் விமர்ச்சிக்கும் பத்திரிகையாளர்கள், படிப்பாளிகள்—அறிவு ஜீவிகள்; எதிர்க்கட்சித் தலைவர்கள்—பிரமுகர்கள்; ஆளும் கட்சிக்குள்ளேயே ஒரு சிறிய ஆளும் கும்பலுக்கு விசுவாசமானவர்கள் தவிர சந்தேகத்துக்குரிய தலைவர்கள்—பிரமுகர்கள்; அரசு எந்திரத்துக்குள்ளேயே ஆளும் கும்பலுக்கு விசுவாசமானவர்கள் தவிர சந்தேகத்துக்குரிய படைத் தளபதிகள், நீதிபதிகள், அதிகாரிகள்; அவர்களுக்குப் பின்பலமாக இருக்கும் முதலாளிகள்—ஆகியோரும் உளவுப் படையினரால் கண்காணிக்கப்படுகின்றனர். ஆக, ஒரு சிறு ஆளும் கும்பலுக்காக ஒட்டுமொத்த சமூகமே கண்காணிக்கப்படும் இழிநிலை, அவலமான—அடிமை நிலைதான் இங்குள்ளது. ஆழமாக அலசும்போது இதைத் தான் இந்த டெலிபோன் ஒட்டுக் கேட்கும் விவகாரம் சொல்லுகிறது.

### ஹெக்டே பதவியில் ஒட்டியிருந்தது எப்படி?

இராமகிருஷ்ண ஹெக்டே—தெற்கின் திருவாளர் பரிசுத்தம்; கறைபடியாத கைகாரர்; நேர்மையின் மறு அவதாரம்; கர்நாடகாவில் நிலையான, திறமையான ஆட்சி—நிர்வாக ஆட்சி நடத்தி ஜனதாக் கட்சியின் பெருமையை நிலைநாட்டியவர் என்று "சோ" முதலிய முதலாளித்துவப் பத்திரிக்கையாளர்கள் போற்றினர்.

ஆனால் கடந்த ஐந்தரை ஆண்டுகள் கர்நாடகா முதல்வர் பதவியில் ஹெக்டே ஒட்டி இருப்பதற்காகக் கையாண்ட வழிமுறைகளோ வேறுவிதமானவை. தமிழ் நாட்டு எம்ஜிஆர், ஆந்திர என்டிஆரைப் போலவே இலவசவேட்டி சேலை, அரிசி வழங்குவது போன்ற பல இலவசக் கவர்ச்சித் திட்டங்களை அமுலாக்கித் தனிமனித கவர்ச்சியைக் கட்டிவளர்த்தார் என்பதுகூட பழைய செய்திதான். தேர்தலில் வெற்றிபெற்றால் மட்டும் போதாது. பதவிகளை வாரி இறைத்து எம்எல்ஏக்களை வளைத்துப் போடவும், அவர்கள் கட்சி மாறாமல் பிடித்து வைக்கவும் பல கைவரிசைகள் செய்தாக வேண்டும். உளவு பார்ப்பது, ஒட்டுக்கேட்பது, பொறியில் சிக்க வைப்பது, உருட்டி மிரட்டுவதற்கு தேவையான ஆதாரங்களைத் திரட்டி வைப்பது, பத்திரிக்கைகளுக்கு இரகசியமாகச் செய்திகளைக் கொடுத்து எதிரியைத் திணறடிப்பது ஆகியவை பஜன்லால் முதற்கொண்டு எம்ஜிஆரை பின்பற்றியஓட்டுப்பொறுக்கிகளின் அரசியல் தந்திரங்கள். இவற்றை அவர்கள் மிகவும் கொச்சையான முறையில் செய்து வந்தார்கள். ஆனால் ஹெக்டே இவற்றையே சாதுரியமிக்க, நாகரிகமான அரசியல் கலையாக வளர்த்தார். கடைசியாக அதற்கே பலியாகிப் பதவியை இழந்தார்.

1983இல் கர்நாடக முதல்வராகப் பதவி ஏற்ற ஒரு மணி நேரத்துக்குள் ஹெக்டே அரசு செய்த முதல்முடிவு, அரசியல் காரியங்களுக்காக போலீசு உளவுத் துறையைப் பயன்படுத்துவது குறித்து விசாரணைக் குழு அமைப்பதுதான். அதற்கு முந்திய குண்டுராவ் ஆட்சியில் காங்கிரசு தேர்தல் வெற்றிக்காக முழுமூச்சில் ஈடுபட்ட போலீசு உளவுத் துறை டிஐஜி கார்த்திகேயன் கட்டாய விடுப்பில் விரட்டப்பட்டார். ஆனால் அதன்பிறகு தனது சிறுபான்மை அரசைப் பாதுகாத்துக் கொள்வதற்காகமுழு அளவில் போலீசு உளவுத் துறையைச் சார்ந்தே ஹெக்டே செயல்பட்டார்.

கட்சி மாறிகளையும் காங்கிரசுத் தலைவர்களையும் கண்காணிக்க டெலிபோன்களை ஒட்டுக் கேட்கும் வேலையும் போலீசு உளவுப்படையை அவர்களுக்கு எதிராக ஈடுபடுத்தவும், அப்போதே தொடங்கி விட்டார் ஹெக்டே, பங்காரப்பா கட்சி மாறி காங்கிரசுத் தலைவராக நியமிக்கப்பட இருந்தபோது, பங்காரப்பாவின் சொத்துக்கள், பெங்களூர் மஃபியா ரௌடி கொத்வால் ராமச் சந்திராவுடன் அவருக்குள்ள தொடர்பு ஆகியவை பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டன. அந்த ரௌடியுடன் பங்காரப்பா எடுத்துக் கொண்ட புகைப்படத்துடன் பெங்களூர் முழுக்கவும் சுவரொட்டிஒட்டப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

பங்காரப்பாவின் டெலிபோனை ஒட்டுக் கேட்டு, ஹெக்டே ஆட்சிக் கவிழ்ப்பு பற்றி மூப்பனாருடன் பேசிய விவரம்; கர்நாடகா காங்கிரசுத் தலைவர் கே.எச். பட்டீலை ''அரிசனன்'' என்று கேவலமாக பங்காரப்பா திட்டியது ஆகிய இரண்டு பேச்சுக்களைப் பதிவு செய்து பத்திரிக்கைகளில் வெளிவரச் செய்தார் ஹெக்டே. காங்கிரசு நஞ்சே கவுடா எம்.பி.யின் டெலிபோனை ஒட்டுக் கேட்டு உக்கிர நரசிம்மப்பா என்ற எம்எல்ஏ காங்கிரசுக்குக் கட்சி மாறுவதாக அறிந்தார் ஹெக்டே. உடனே உக்கிரநரசிம்மப்பாவின் மனைவியிடமிருந்து ஒரு கடத்தல் புகாரை வாங்கிக் கொண்டு நஞ்சே கவுடாவின் வீட்டை சோதனையிட்டு எம்எல்ஏவை மீட்டனர்.

அதேபோல பங்காரப்பா ஆதரவாளராக மாற இருப்பதாக அறிந்து பாரதீய ஜனதா எம்எல்ஏ வசந்த் பங்காராவுக்குப் போலீசு உளவுப் படையின் காவல்போட்டனர். கட்சி மாறிகள் மற்றும் காங்கிரசுத் தலைவர்களின் நடமாட்டங்களைக் கவனிப்பது உளவுப் படையின் முக்கியவேலையானது. மராட்டிய முதல்வர் வசந்த் தாதா பட்டீலின் மனைவி சாலினித்தாய் பணத்தை மடியில் கட்டிக் கொண்டு எம்எல்ஏக்களை விலை பேச பெங்களூர் வந்தார். இரகசியமாக அவர் வந்ததும், ஓட்டலில் தங்கியிருப்பதும் உளவுப் படையின் மூலம் கண்டுபிடித்து புகைப்படமெடுத்து பத்திரிக்கைகளில் பிரசுரித்தார் ஹெக்டே. ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிபலிக்காமல் ஓடிப் போனார் சாலினித்தாய். ஜனதா ஆதரவு சுயேட்சை எம்எல்ஏ பைரே கவுடாவை எதிர்க்கட்சித் தலைவர் வீரப்ப மொய்லி விலை பேசினார். எம்ஜிஆர் பாணியில் ஒரு சிறிய 'டேக் ரெக்கார்டரை'க் கொடுத்து கட்சி மாறுவதற்கான பேரத்தைப் பதிவு செய்து வெளியிட்டார் ஹெக்டே. ஆனால் விசாரணைக் கமிஷன் தீர்ப்பில் அந்த ஆதாரம் போலியானது—''போர்ஜரி'' என்று தீர்ப்பு வந்ததும்வாய் மூடிக் கொண்டார் ஹெக்டே.

உளவுப்படை டெலிபோன் ஒட்டுக் கேட்கும் விவகாரம் ஒரு முறை விபரீதமாக முடிந்தது. ஒரு ஜனதா எம்எல்ஏ கட்சிமாறுவதாக செய்தி அறிந்து அவரைத் தேடும்படி உளவுப் படையை ஏவினார் ஹெக்டே. ஒரு மந்திரி தலைமையில் புறப்பட்ட அவர்கள் ஒரு விபச்சார விடுதியில்வைத்து அந்த எம்எல்ஏவைப் பிடித்தார்கள். ஒரு போலீஸ்காரரை அனுப்பி அவரை மீட்டு வந்தார்கள்.

கட்சி மாறிகளுக்கும் அரசியல் எதிரிகளுக்கும் எதிராகத் தொடங்கிய உளவுப்படை மற்றும் ஒட்டுக் கேட்கும் வேலையைத் தனது அரசுக்கு எதிராக லஞ்ச ஊழல் புகார் கூறுபவர்கள்மீதும் காட்டத் தொடங்கினார் ஹெக்டே. அவரது மகன் பரதன் ஹெக்டேவுக்கு எதிராக லஞ்ச—ஊழல் புகார்சொன்ன ஏ.கே. சுப்பையா, அதற்கு ஆதரவாக இருந்த சி.பி பரதன் ஆகியோருக்கு எதிராக உளவுப் படையை ஏவினார். ஹெக்டே அரசைத் தொடர்ந்து அம்பலப் படுத்தும் லங்கேஷ் பத்திரிக்கா ஆசிரியரின் டெலிபோனை ஒட்டுக் கேட்கும்படி உத்திர விட்டார்.

ஹெக்டே ஆட்சிக்கு வந்த பிறகு போலீசு உளவுத்துறையை நவீனப்படுத்தவும் விரிவுபடுத்தவும் பல திட்டங்களை வகுத்து செயல்படுத்தினார். கர்நாடக சட்டமன்ற மற்றும் அமைச்சகங்களையே ஒட்டுக்கேட்கும், உளவு பார்க்கும்ஏற்பாடுகளை செய்தார். 1985இல் தனது அமைச்சரக அலுவலகத்திலிருந்து போலீசு டி.ஜி பி கருடாச்சாரை டெலிபோனில் அழைத்தார் தேவேகவுடா.முக்கியமான விஷயமானதால் டெலிபோனிலோ, அலுவலகத்திலோ பேசுவதற்கு டி.ஜி.பி சம்மதிக்கவில்லை. வேறு பொது இடத்தில் சந்தித்தார்கள். இதுபற்றி தேவே கவுடா ஹெக்டேவிடம் கேட்டபோது அவர் ஒட்டுக் கேட்பதை உறுதிப்படுத்தினார்.

இப்படி அரசியல் காரியங்களுக்கு போலீசு உளவுத்துறையைக் கேடாகப்பயன்படுத்துவதை எதிர்ப்பதாகத்துவங்கிய ஹெக்டே ஆட்சி, அந்த முறைகேட்டையே பூதாகரமாக வளர்த்து, அதற்கே பலியானது.

### ஒட்டுக் கேட்கும் விவகாரம் வெளியே வந்தது எப்படி?

சுயநலம், பதவிப்போட்டி என்று வரும்போது கொள்கை கிள்கை எல்லாம் காற்றில் பறக்க விட்டு விட்டு, எப்படி சந்தர்ப்பவாதமாகக் கூடி அடுத்துக் கெடுக்கிறார்கள் ஒட்டுப்பொறுக்கிகள் என்பதற்கு இந்த டெலிபோன் ஒட்டுக்கேட்கும் விவகாரம் ஒரு நல்ல சான்றாக உள்ளது.



தேவிலால், வி.பி.சிங் ஆகியோரோடு சேர்ந்து உருவாகி வரும் அகில இந்திய எதிர்க் கட்சித் தலைமையில் இடம் பிடிக்கவும், சந்திரசேகரை ஓரங்கட்டவும் ஹெக்டே முயன்று வருகிறார். தனது தலைமையை ஏற்க மறுக்கும் எதிர்க் கட்சிகளின் ஐக்கியத்தை எப்படியாவது தகர்த்துவிட சந்திரசேகரும் பகுகுணாவும் முயலுகின்றனர். அதற்கு முதற் கட்டமாக கர்நாடகா முதல் மந்திரி பதவியை ஹெக்டேயிடம் இருந்து பிடுங்கி தேவே கவுடாவுக்குத் தருவதாக ஆசை காட்டி கர்நாடகா ஜனதா ஆட்சிக்குள் போட்டி கும்பலை உருவாக்கினார் சந்திரசேகர். தனது கையாளான அஜித்சிங்கை ஜனதா தலைவராக்கி தேவே கவுடா, அஜித்சிங்—சுப்பிரமணிய சுவாமி கும்பலை உருவாக்கி ஹெக்டேயை வீழ்த்தும் வேலையில் இறங்கினார்.

பதவி விலகுவதாக மிரட்டி வந்த ஹெக்டேக்குப் பெரும்பான்மை பலம் இருந்தும், சந்திரசேகர் கும்பலின் சதிவேலையை அம்பலப்படுத்த எதிர்ச் சதியில் இறங்கினார் ஹெக்டே. தேவே கவுடா—அஜித்சிங் டெலிபோன் உரையாடலைப் பதிவு செய்து தனது ஆதரவுப் பத்திரிக்கையான ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' மூலம் வெளியிட்டார். இது நேர்மையற்ற ஒட்டுக் கேட்கும் முறை என்று தேவே கவுடா சாடியபோது டெல்லி உளவுத் துறையிடமிருந்துதான் உரையாடலைப் பெற்றதாக ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' ஏடு புளுகியது. நீதி விசாரணை நடத்தும்படி பூடாசிங்கிடம் இந்திரா காங்கிரஸ் எம்பி நஞ்சே கவுடா கோரிய போது அவர் அக்கறை காட்டவில்லை.

ஆனால் ஹெக்டேயை வீழ்த்துவது என்று முடிவு செய்த சந்திரசேகர்—அஜித்சிங் கும்பல், தமது அரசியல் எதிரி என்று அதுவரை சாடிவந்த ராஜீவ் கும்பலின் தயவை நாடியது. சுப்பிரமணிய சுவாமி, யஸ்வந்த் சின்ஹா ஆகிய இரண்டு எம்.பி களை அனுப்பியது. அவர்கள் புதிய செய்தித்துறை மந்திரியான வீர்பகதூர் சிங்கை சந்தித்து ஹெக்டேவுக்கு எதிரான ஆதாரங்களைப்பெற்றனர். கர்நாடகாவில் டெலிபோன் ஒட்டுக் கேட்டதற்கான ஆதாரங்களைக் கொடுத்தால் மற்ற மாநில விவகாரங்களும் வெளியே வரும் என்று அதிகாரிகள் தயங்கினர். பிரதமர் ராஜீவ் நேரடியாகவே தலையிட்டு,

படிப்பகம்

www.padippakam.com

ஹெட்டேயை விழ்த்தவும், எதிர்க் கட்சிகள் மீது எதிர்ப் பிரச்சாரம் தொடுக்கவும் கிடைத்த வாய்ப்பை நழுவவிடக்கூடாது என்று முடிவு செய்தார்.

சந்திரசேகர் கும்பலும் ராஜீவ் கும்பலும் திட்டமிட்டு சதி செய்து அவர்களின் ஆதரவு ஏடான ''டைம்ஸ் ஆஃப் இந்தியா'' மூலம் ஒட்டுக்கேட்ட விவரத்தை வெளியிட்டனர். இந்த சதிகாரர்கள் விரித்த வலையில் விழப் போவது தெரியாமல் இந்த விவகாரம் குறித்து இரு எதிர்க்கட்சி எம்பிகள் நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்டனர். அதுகடைசிக் கேள்வியாக இருந்தது. ஆனாலும் தவறவிடக்கூடாது என்பதற்காக அதற்கு முன்பு கேள்விகள் கேட்டிருத்த 16 காங்கிரசு எம்பிக்களைத் தலைமறைவாகிவிடும்படி உத்திரவு போட்டு முதல் கேள்வி ஆக்கினர். தேவே கவுடாஉட்பட போட்டி ஜனதா எம்எல்ஏக்கள், மந்திரிகள், காங்கிரசுத் தலைவர்கள், முஸ்லீம் மற்றும் இந்துமத வெறி அமைப்புகள், பத்திரிக்கையாளர்கள் உட்பட 49 பேர்களது டெலிபோன்களை ஒட்டுக்கேட்கும்படி கர்நாடக தலைமைச் செயலாளர், போலீசு உளவுத்துறை தலைமை அதிகாரி மூலம் உத்திரவு போட்டுள்ளார் என்கிற தகவலை மந்திரி நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

வழக்கத்துக்கு மாறாகக் காத்திருந்த ராஜீவ்காந்தி குறுக்கிட்டு ''சட்டத்துக்கு விரோதமாக கர்நாடாவில் டெலிபோன் ஒட்டுக் கேட்பது நடந்துள்ளது. இப்படி நடக்காதவாறு டெலிபோன் சட்டம் 1885ஐத் திருத்துவோம்'' என்று கர்ஜித்தார். அதைத் தொடர்ந்து ஹெக்டே பதவி விலக வேண்டும் என்கிற கூச்சலைப் பலமாகக் கிளப்பியது சந்திரசேகர் கும்பலும் ராஜீவ் கும்பலும். வேறு வழியில்லாத நிலையில், ''தார்மீகப் பொறுப் பேற்பதாக''க் கூறி ஹெக்டே ராஜினாமா செய்தார்.

## பரிசுத்தங்கள் போடும் பகல் வேஷங்கள்

நேர்மை, நாணயம் அடிப்படையிலான அரசியல் நடத்துவதாகப் பீற்றிக் கொண்ட ஜனதாவும் ஹெக்டேவும் ஒட்டுக் கேட்பதையும், உளவு பார்ப்பதையும் தமது அரசியல் வழிமுறையாகப் பயன்படுத்தி வந்தார்கள் என்பதே உண்மை. 1885ம் ஆண்டு காலனியச் சட்டப்படி ஒட்டுக் கேட்பது நீடிக்கிறது என்றால் 1977—79இல் மத்தியிலும், கடந்த ஐந்தரை ஆண்டுகளாக கர்நாடாவிலும் அது தொடர்வதற்கு இவர்கள் ஏன் அனுமதித்தார்கள்? எதிர்த்தரப்பினரைத் தார்மீக ரீதியில் வீழ்த்துவதற்காக, அவர்



ஒட்டுக் கேட்கும்படி ஹெக்டே அரசு போட்ட உத்தரவு

களின் ஒழுக்கக்கேடுகள், நடத்தைகளை வீதிக்குக் கொண்டு வருவதற்காக சில ''பிரபல''மான பெண்களின் டெலிபோன்களும் ஒட்டுக் கேட்கப்பட்டன. தமிழக ஒட்டுப் பொறுக்கிகளின் ஆபாச வக்கிர அரசியலுக்கு சமமான தரத்தில் ஜனதா-ஹெக்டே— காங்கிரசு—அரசியல் கர்நாடகாவில் நடந்துள்ளது.

''டெலிபோன்களை ஒட்டுக் கேட்பது அநாகரிகமானது. நேர்மை – நாணயம் இல்லாதது, தனிமனித சுதந்திரம்– அந்தரங்கத்தை பாதிப்பது, சட்டவிரோதமானது'' என்று தீவிரப் பிரச்சாரம் நடத்தி ஹெக்டேயை வீழ்த்தியது பாசிச ராஜீவ் கும்பல். ஆனால் பதவி விலகும் முன்பு ஹெக்டே நீதி விசாரணை கோரிய போதும், தார்மீகப் பொறுப்பேற்றுஹெக்டே விலகியதைப் போலவே மத்தியிலும் மற்ற மாநிலங்களிலும் ஒட்டுக் கேட்பதற்காகப் பொறுப்பேற்று ராஜீவ் ராஜினாமா செய்ய வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் கோரியதையும் பாசிச ராஜீவ் கும்பல் கூச்சல் போட்டே நிராகரித்துவிட்டது.

ராஜீவ் கும்பல் பரம்பரை பரம்பரையாக ஒட்டும் கேட்கும் வேலையைச் செய்து வருகிறது. விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்காக ஆங்கிலேய காலனியவாதிகள் நிறைவேற்றிய 1885 தந்திச் சட்டம் மற்றும் 1898 தபால் அலுவலகச் சட்டத்தையும் இதற்காகப் பயன்படுத்தி வருகிறது. தாத்தா நேருவின் ஏகபோக அரசியல் ஆதிக்கம் நிலவியபோது கம்யூனிஸ்டுகளுக்கு எதிராகவே பிரதானமாக அவை ஏவி விடப்பட்டன. ஆத்தா இந்திரா ஆட்சிக்கு வந்தபிறகு குறிப்பாக 1969 காங்கிரசு பிளவிலிருந்து ஒட்டுக் கேட்பதையும் உளவு பார்ப்பதையும் முக்கிய அரசியல் ஆயுதமாக்கிக் கொண்டார். உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் உளவு பார்ப்பதற்காகவே ''ஐ.பி'' மற்றும் ''ரா'' ஆகிய இரண்டு உளவு—அதிரடிப் படைகளை இந்திராஉருவாக்கினார்.

அவசர நிலைப் பாசிச ஆட்சியின்கீழ் இந்த இரு உளவு— அதிரடிப் படைகளும் சஞ்சய் காந்தியின் நேரடி ஆதிக்கத்தில் வந்தது. நாட்டிலிருந்த பெயரளவிலான ஜனநாயக உரிமைகள்கூட காலில் போட்டு மிதிக்கப்பட்டன. அதன்பிறகு இரண்டாவது சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்திய ஜனதா ஆட்சியிலும் ஒட்டுக் கேட்கும் சட்டங்களும் உளவு— அதிரடிப்படைகளும் நீடித்தது. மீண்டும் இந்திரா—ராஜீவ் கும்பல் ஆட்சிக்கு வந்த பிறகு இவை விரிவு படுத்தி நவீனப்படுத்தப்பட்டன. டெலிபோன் கம்பிகளில் இணைப்புக் கொண்டு ஒட்டுக் கேட்பதும், பதிவு செய்வதும் பழைய முறை. இதனால் ஏற்படும் சில சத்தங்களைக் கொண்டுடெலிபோன் பேசுபவர்கள் கண்டு கொள்ள முடியும். ராஜீவ் ஆட்சியில் ஒரே சமயத்தில் பல ஆயிரம் டெலிபோன்களை, கம்பி இணைப்பின்றி பொத்தானை அழுத்தியதும் பதிவு செய்யக்கூடிய அதிநவீன மின்னணுக் கருவிகள் இறக்குமதி செய்யப்பட்டன. தகவல் தொடர்புத் துறை அதிகாரிகள் உட்பட யாருக்கும் தெரியாமல் ஐ.பி. மற்றும் ''ரா'' உளவு அதிரடிப் படை நேரடியாகவே அவற்றை இயக்குகின்றன. நுண்ணணுத் தகவல் தொடர்புகளில் கூடக் குறுக்கிட்டு ஒட்டுக் கேட்கும் அதிநவீன கருவிகள் 'ரா'விடம் உள்ளன.

இதெல்லாம் போதாதென்று ஓராண்டுக்கு முன்பாக தனியார் தபால்களைத் தடுத்து உடைத்து பார்க்கவும், முடக்கவும், அழிக்கவும் இன்னும் பல பாசிச அதிகாரமுடைய ஒரு சட்டத்தை பாசிச ராஜீவ் கும்பல் நிறைவேற்றியது. இந்திரா காலத்தில் ஜெயில்சிங் உள்துறை மந்திரியாக இருந்த போதே வகுத்த சட்டம் இது. ஆனால் ராஜீவுடன் முரண்பட்ட பிறகு அந்த சட்டத்துக்கு அரசுத் தலைவர் என்கிற முறையில் ஒப்பமிட மறுத்துத் திருப்பி அனுப்பி விட்டார் ஜெயில்சிங். இன்னும் அரசுத் தலைவர் ஒப்புதலுக்காக காத்திருக்கிறது அச்சட்டம்.

காங்கிரசின் போட்டித் தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள், அறிவு ஜீவிகள் ''சமூக சேவகர்''கள், துாதரக அதிகாரிகள் ஆகியோர் மட்டுமல்ல, அரசுத் தலைவர் மாளிகையிலே கூட ஒட்டுக் கேட்கும் கருவிகள் பதிக்கப்பட்டுள்ளன. அரசுத் தலைவர் மாளி



படிப்பகம்

www.padippakam.com

கை முன்பும், "இந்தியன் எக்ஸ்பிரஸ்" ஏடு அலுவலகத்தின் முன்னும் ராஜீவ் கும்பலின் உளவுத்துறை உளவாளிகள் ஒளிந்திருந்து வேவு பார்ப்பதை புகைப்படம் போட்டு அம்பலப்படுத்தினர்.

இதையெல்லாம் விட வெட்கக்கேடான ஒரு காரியத்தைச் செய்தது ராஜீவ் கும்பல். 1983ல் திமுக எம்.பி. வை. கோபாலசாமியின் சொந்த ஊரான நெல்லை—குருவிக்குளம் டெலிபோனை ஒட்டுக் கேட்கும்படி தமிழக உளவுப் படை இரண்டு முறை இரகசிய உத்திரவு போட்டிருந்தது. அதை அப்போது அம்பலப்படுத்திய வை. கோபாலசாமி மீதும், "இந்தியா டுடே" ஏட்டின் ஆசிரியர் பிரபு சௌலா மீதும் இரகசிய சட்டத்தை மீறியதாக வழக்குப்போட்டனர். அப்போதே இந்த ஒட்டுக் கேட்கும் முறைக்கு எதிராக நாடாளுமன்றத்தில் ஒரு தனி நபர் சட்டத் திருத்தம் கொண்டு வந்தார் கோபாலசாமி. அந்தத் தனி நபர் மசோதா விவாதத்திற்கு வராமலேயே செய்து விட்டது இந்திரா கும்பல். அதாவது அந்த மசோதா விவாதத்திற்கு வரும் நாளன்று திட்டமிட்டு அதற்கு முந்திய விவாதத்தை இழுத்தடிப்பதற்காகவே தனது எம்.பி.களைத் தொடர்ந்து பேசும்படி செய்தது. கோபாலசாமியின் பதவிக்காலமே முடிந்து, மசோதா விவாதிக்காமலேயே காலாவதி ஆனது.

மீண்டும் கோபாலசாமி எம்.பி ஆன பிறகு மீண்டும் அந்த தனி நபர் மசோதாவைத் தாக்கல் செய்தார். ஏழாண்டுகளுக்குப் பிறகு அது விவாதத்திற்கு வந்தது. அப்போது டெலிபோன் ஒட்டுக் கேட்பதையும், தபால் தணிக்கை, முடக்கச் சட்டத்தையும் மிகவும் வெறியோடு ஆதரித்து வாதிட்டார் தகவல் தொடர்பு துணை மந்திரி கிரிதார் கோமங்கோ. "தனி மனித சுதந்திரம், அந்தரங்கத்துக்கு எதிரானது என்றாலும் தேசிய நலன்களைக் கருதி ஒட்டுக் கேட்கவும் உளவு பார்க்கவும் உள்ள சட்டங்களை நீக்கமுடியாது" என்று வழக்கமான கூப்பாடுபோட்டு ராஜீவ்கும்பல்வாதிட்டது. கோபாலசாமியின் மசோதாவைத் தோற்கடித்தது. இது நடந்தது எப்போது?

ஆகஸ்டு 9ந் தேதி நாடாளுமன்றத்தில் ஹெக்டே ஒட்டுக் கேட்டதற்கு எதிராக ஆவேசமாக வாதிட்டது பாசிச ராஜீவ் கும்பல். இம்மாதிரி முறைகேடுகளுக்கு எதிராக சட்டத் திருத்தம் செய்வதாக சவடாலடித்தார் ராஜீவ். அதற்குச் சரியாக 10 நாட்களுக்கு முன்புதான் அதாவது ஜூலை 29ந் தேதிதான் ஒட்டுக் கேட்பது-உளவு பார்ப்பது தேசிய நலன்களுக்கு அவசியமானவை என்று



கூறி கோபாலசாமியின் மசோதாவை நிராகரித்தது பாசிச ராஜீவ் கும்பல். இதுதான் ஒட்டுக்பொறுக்கிகளின் யோக்கியதை!

## எங்கும் நிறைந்துள்ள உளவுப் படையினர்

கம்யூனிஸ நாடுகளில்தான் தனி மனித அந்தரங்கம், தனி மனித சுதந்திரம், ஜனநாயக மற்றும் குடி உரிமைகள் ஆகிய மனித உரிமைகள் மீறப்படுகின்றன; நாடாளுமன்ற ஜனநாயகத்தின் கீழ் அவை உத்திரவாதம் செய்யப்பட்டுள்ளன என்று முதலாளித்துவ சிந்தனையாளர்கள் நிறையவே கதை—கட்டுரை விடுகின்றனர். கோர்ப்பச்சேவ் ஆட்சியிலுள்ள ரஷ்யாவையும், டெங்சியாவோபிங் ஆட்சியிலுள்ள சீனத்திலும் நிலவும் போலி சோசலிசத்தின் கீழ் மனித உரிமைகள் வழங்கப்பட்டிருப்பதாக ஏற்கும் அவர்கள் ஸ்டாலின், மாவோ தலைமையைச் சாடுகின்றனர். குறிப்பாக ஸ்டாலினை இட்லருடன் ஒப்பிட்டுத் தூற்றுகின்றனர். சோசலிசம் என்பது நாட்டின் சிறுபான்மை சுரண்டும் வர்க்கத்துக்கு எதிராக பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் சர்வாதிகாரம் என்று பகிரங்கமாகவே பிரகடனப்படுத்தி அவர்களது உரிமைகள் சட்டப்படி பறிக்கப்படுகின்றன. ஆனால் அனைவருக்கும் ஜனநாயக மற்றும் குடியுரிமை பற்றிப் பீற்றிக் கொள்ளும் முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகத்தின் கீழ் அதன் பிறப்பிடமான, வளர்ப்பிடமான ஐரோப்பிய—அமெரிக்க நாடுகளிலேயே ஒட்டுக் கேட்பதும், உளவு பார்ப்பதும் அரசியல் வழிமுறையாக உள்ளது.

ஜனநாயக மற்றும் குடியுரிமை பற்றி சட்டப்படியும், வெளிப்படையாகவும் பேசிக்கொண்டே இரகசியமாக, சட்டவிரோதமாகவும், முரண்பாடான சட்டங்களைக் கொண்டும் அவற்றை செல்லாக் காசாக மாற்றி விடுவதுதான் முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகம். இங்கே உழைக்கும் மக்களின் புரட்சிகர இயக்கத்தை ஒடுக்குவதற்காகவே ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு தனி உளவு—அதிரடிப் போலீசுப் படை இரகசியமாக இயங்குகிறது. (தமிழ்நாட்டில் கியூ பிரிவு போலீசைப்போல) இது தவிர ஒவ்வொரு மாநிலக் குற்றப் பிரிவுப் போலீசில் ஒரு சிறப்புப் படை எல்லா அரசியல் இயக்கங்களையும் வேவு பார்ப்பதற்காக உள்ளது. ஒவ்வொரு வட்ட, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களிலும் ஒரு தனி நிர்வாகப் பிரிவு இயங்குகிறது. போலீசு மற்றும் சிவில் அதிகாரிகள் ஒவ்வொரு மாதமும் மேலே அறிக்கை அனுப்புகிறார்கள். இது தவிர "சிறப்புக் கவனத்துக்குரியவர்கள்" உளவு பார்க்கவும் தேவையானால் இரகசியமாக படுகொலை செய்வது உட்பட பல அதிரடி நடவடிக்கைகளுக்கும் ஆளாகிறார்கள். அவசர நிலை ஆட்சியின்போது கேரள ராஜன் கொலை உட்பட பல வழக்குகள் வெளிவந்தன.

ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளுக்கிடையே பதவிச் சண்டை, கும்பல்களுக்கிடையேயான மோதல் முற்றி பகைமையாகும்போது இந்த இரகசியங்கள் வெளிப்படுகின்றன. அரசின் உளவு—அதிரடிப் படையை அவர்களுக்குள்ளாகவே ஏவிவிட்டு ஒருவரை மற்றொருவர் வீழ்த்த முற்படும் போதும் இந்த இரகசியங்கள் பகிரங்கமாகின்றன. அப்படித்தான் பாசிச இந்திரா—ராஜீவ் கும்பல் சி.பி.ஐ, ஐ.பி, "ரா" முதலிய உளவு—அதிடிப்படையைத் தமது அரசியல்—சுயநல நோக்கங்களுக்காகத் தொடர்ந்து பயன்படுத்தி வந்த உண்மைகள் தெரிய வந்தன. அப்படித்தான் ஜனதா ஹெக்டேயின் உளவு—ஒட்டுக் கேட்கும் விவகாரம் தெரிய வந்தது.

இனிமேலாவது இந்த இழிகேடர்கள் திருந்தி ஜனநாயக மற்றும் குடியுரிமை ஆகிய மனித உரிமைகளை ஏற்பார்களா? அனுமதிப்பார்களா? மாட்டார்கள். அவர்களுக்குள் அதிகாரத்துக்கான சண்டை வலுக்க வலுக்க பரந்துபட்ட மக்கள் கூடுதலான போராட்டங்களில் இறங்க,இறங்க எல்லா உரிமைகளையும் முற்றாக மறுத்து அதிரடி உளவுப் படைகளை நம்பியே ஆட்சி நடத்தத்தான் முற்படுவார்கள். அதுதான் பாசிச ஆட்சி. அதை நோக்கித்தான் நாட்டை வேகமாகத் தள்ளிச் செல்கிறார்கள்.

● மாணிக்கவாசகம்

படிப்பகம்

www.padippakam.com

# வாசகர்களே நிருபர்களாக.

## போலீசு நிலையத்தில் சாராயக்கடை ஏலம்!

தமிழகமெங்கும் நடப்பில் உள்ள மதுவிலக்குச் சட்டத்தை, ஒவ்வொரு போலீசு நிலையமும், அதற்கென உள்ள பறக்கும் படைகளும் எந்த யோக்கிதையில் அமுல் நடத்திக் கொண்டிருக்கின்றன என்பது நாம் அறிந்ததுதான். ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு ஊரிலும் கள்ளச் சாராயம் விற்கப்படும் வயற்காட்டிற்கோ, சுடுகாட்டிற்கோ சென்று தவறாமல் 'மாமூல்' வசூலித்து வருகிறது போலீசு கும்பல்.

இந்த நடைமுறை மிகவும் சிரமமானதாகவும், அலைச்சலான முறையாகவும் இருப்பதால் ஒரு புது முறையை புகுத்தியுள்ளார் தஞ்சை—பூதலூர் சப் இன்ஸ்பெக்டர் பாலன். கள்ளச் சாராயக் கடை நடத்துவதற்கான உரிமத்தை போலீசு நிலையத்திலேயே வைத்து பகிரங்க ஏலத்தில் விட்டு உட்கார்ந்த இடத்திலேயே பணம் சம்பாதித்து வருகிறார்.

### பகிரங்க ஏலம்

இதன் முதல் கட்டமாக 26-7-88 காலை 10 மணிக்கு, பூதலூர் போலீசு நிலையத்தில், எஸ். ஐ பாலனின் அறிவிப்பை அடுத்து




கள்ளச்சாராய வியாபாரிகள் அனைவரும் கூடினார்கள். எஸ். ஐ பாலன் தலைமையில், (சட்டம்—ஒழுங்கு) கிரைம் எஸ்.ஐயும் போலீசும் குழுமியிருக்க, கான்ஸ்டபிள் ராஜி ஒவ்வொரு கடையாக ஏலம் போட்டார். போலீசு நிலையத்தின் அதிகாரத்திற்கு உட்பட்ட பூதலூர் பகுதி மட்டும் 6 கள்ளச்சாராய மையங்களாகப் பிரிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஏலம் விடப்பட்டது.

கடை எண் ஒன்று: மேல் நிலைப்பள்ளி, பூதலூர், வாரம் மாமூல் ரூபாய் 600, ஏலம் எடுத்தவர்கள் மார்கம்பட்டியைச்சேர்ந்த முருகேசன், குண்டு. இரண்டு: பூதலூர் ரயிலடி, ரூபாய் 600, வைத்தி, சண்முகம் [அ.தி.மு.க. ஜெ-பிரமுகர்). மூன்று: பூதலூர் பாப்பார சுடுகாடு, ரூபாய் 600, காமராஜ், இளவரசன். நான்கு: பூதலூர் அம்பாள் திரையரங்கம், ரூபாய் 1000, தியாகராஜன், D. பாக்கியராஜ் [தி.மு.க] ஊராட்சி மன்றத் தலைவர் கோவில் பத்து. ஐந்து: கோயில் பத்து சுடுகாடு, ரூபாய் 600, போசாங்கு.

### துணை ஒப்பந்தம்

சாராய உற்பத்தி இடங்களிலிருந்து [ஊறல்], விற்பனைமையங்களுக்கு சைக்கிளில் கொண்டு

## நடுத்தெருவில் நிற்கும் ஆசிரியத் தம்பதிகள்

கடந்த 8. 8. 88 தேதியன்று மாவட்ட கல்வி அதிகாரி கடலூர் அலுவலகத்தின் முன் ஒரு பெண்மணி சாகும்வரை உண்ணாவிரத போராட்டத்தை துவங்கினார். அவரை அணுகி விசாரித்தோம். துயரம் தோய்ந்த முகத்துடன் அவர் தமக்கு நேர்ந்த கொடுமையைசொல்ல ஆரம்பித்தார்.

அவருடைய பெயர் மரிய பேபி. சின்ன சேலம் சரகம் மேட்டுப்பாளையம் ஆசாத் பள்ளியில் ஆசிரியையாக பணியாற்றி வந்திருக்கிறார். அதே பள்ளியில் அவருடையகணவரும் 19 ஆண்டு காலம் தலைமையாசிரியராக பணியாற்றி வந்திருக்கிறார். குதூஸ் என்பவர் அப்பள்ளியின் நிர்வாகியாகவும், கௌரவ (!) ஆசிரியராகவும் இருந்து கொண்டு அப்பள்ளியை ஆட்டிப்படைத்து வருகிறார். இவையாகவும் ஏறக்




குறைய 7 ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம்!

'81 ஆம் ஆண்டு இறுதியில் ஒரு முறை பள்ளியை திடீர் சோதனையிட வந்திருக்கிறார், பள்ளி துணை ஆய்வாளர். அந்த நேரத்தில் நிர்வாகி குதூஸ் பள்ளியில் இல்லாமல் போகவே ஆள் விட்டு அனுப்பி குதூஸை அழைத்து அவர் மீது எரிந்து விழுந்திருக்கிறார், துணை ஆய்வாளர். பதிலுக்கு குதூஸும் துணை ஆய்வாளர் மீது எரிந்து விழுந்திருக்கிறார். இதனால் இருவருக்கும் இருந்த உறவில் விரிசல் விழுந்திருக்கிறது. இது அனைத்திற்கும் காரணமே தலைமையாசிரியர் சிவலிங்கம்தான் என முடிவு கட்டி தொடர்ந்து அவர் மீதுபழி வாங்கும் நடவடிக்கையில் இறங்கியிருக்கிறார், குதூஸ். இது பெரிய அளவில் வளர்ந்து, '84 ஆம் ஆண்டு துவக்கத்தில் தலைமையாசிரியர் சிவலிங்கத்தின் மீது பல பொய்யான குற்றச்சாட்டுக்களை கூறிஅவரை உதவி ஆசிரியராக பணியிறக்கம் செய்தார்.

எப்படியும், சிவலிங்கத்தை வேலையிலிருந்து விரட்டியடிப்பது எனகங்கணம் கட்டிய குதூஸ் தொடர்ச்சியாக அவருடைய சட்டப்படியான உரிமைகளை மறுத்து வந்திருக்கிறார். '86 ஆம் ஆண்டு மத்தியில் 8 மாதகாலம் மருத்துவ விடுப்புக் கோரிய சிவலிங்கத்தின் கோரிக்கையை மறுத்தார். ஆனால், ஆசிரியர் சிவலிங்



படிப்பகம்

www.padippakam.com



செல்லப்படும் சாராயத்துக்கு போலீசு தொந்தரவு கொடுக்காமல் இருக்கவும் தனி மாமூல் தீர்மானிக்கப்பட்டது. பூதலூர் அக்ரஹாரத்தில் குடியிருக்கும் போலீசு நிலைய எழுத்தர் பாண்டுவின் தாயார் மூலமாக மாமூல் கொடுப்பது என முடிவெடுக்கப்பட்டது.

மேற்படி ஒப்பந்த அடிப்படையில் இன்று கள்ளச்சாராயம் தீவிர போலீசு பந்தோபஸ்த்தோடு ஊரெங்கும் வழிந்தோடிக் கொண்டிருக்கிறது.

போலீசின் அட்டூழியத்தைக் கண்டு ஊரே திகைத்து நிற்கிறது. பூதலூர் ஊராட்சிமன்ற தலைவர் கோ. பொன்னுராமன் தலைமையில் வெற்றிகரமரக இயங்கி வந்த மது ஒழிப்பு கமிட்டியை முடமாக்கும் வேலையில் இப்போது நேரடியாக இறங்கியிருக்கிறார் எஸ்.ஐ. இவருக்கு துணையாக துணை டெபுடி சூப்ரண்ட் ஆப் போலீசு தங்கையனும் களத்தில் இறங்கி, புகார் கொடுக்கச் சென்ற மது ஒழிப்பு கமிட்டியினரை நேரடியாக மிரட்டி வருகிறார்.

'நமக்கு ஏன்வம்பு' என்று ஊர்மக்கள் ஒதுங்கியிருக்கும் வரை மக்களின் வரிப்பணத்தில் வயிறு வளர்த்து வரும் இந்த அதிகார வர்க்க கும்பல் சட்டத்தையும், குண்டாந்தடியையும் தூக்கிக் கொண்டு மக்களுக்கெதிராக செயல்படுவது அதிகரித்துக் கொண்டேதான் இருக்கும்.

பழனிவேலு—
விவசாயிகள் விடுதலை
முன்னணி,
திருவையாறு ஒன்றியம்.

கம் சட்டப்படியான தமது உரிமையை பயன்படுத்திக் கொண்டு விடுப்பில் சென்றிருக்கிறார்.

அதிகார திமிரில்ஊறிப்போன குதூஸ், விடுப்புமுடிந்துபணிக்குத் திரும்பிய சிவலிங்கத்தை பள்ளியினுள்ளே நுழையவே விடவில்லை. குதூஸின் குண்டர்களால் மிரட்டலுக்கும் பலவித தொல்லைகளுக்கும் உள்ளாகும் சிவலிங்கத்தால் இன்றுவரை பணிக்கு திரும்ப முடியவில்லை. இதுமட்டுமல்ல, சிவலிங்கம் விடுப்பில் இருந்த நாட்களில் தனியாக பணிக்குச் சென்ற அவர் மனைவி பரியபேபியையும் மிரட்டி விரட்டியிருக்கிறது குதூஸின் குண்டர் பட்டாளம். அவரும் இதுநாள் வரை வேலைக்குச் செல்ல முடியவில்லை.

இந்த அரசு ஊழியர் தம்பதிகள் நியாயம் கேட்டு ஏறி இறங்காத படிக்கட்டுகளே இல்லை. கடைசியாக, கடந்த ஆண்டு இதே மாதத்தில், விருத்தாசலம் மாவட்ட கல்வி அதிகாரி அலுவலகம் முன்பும் இதே போல் உண்ணாவிரதம் இருந்திருக்கின்றனர். கல்வி அதிகாரியோ "விசாரணைக்கு ஒன்றுமில்லை" என்று திமிர்த்தனமாக கூறியிருக்கிறார்.

அத்தம்பதிகள் இன்றுவேலை கூட கேட்கவில்லை. குதூஸால் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் சம்பள நிலுவை ரூபாய் 5000 யும், மற்றும் தங்கள் சம்பளத்தில் பிடித்தம் செய்துள்ள மற்ற நிலுவைகளையும் உடனடியாக வழங்கி உதவுமாறுதான் கோருகிறார்கள். அதற்கே, இந்த அதிகாரவர்க்க பிணந்தின்னிகளிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை.

அரசு ஊழியர்களுக்கும் அமைப்பு ரீதியில் திரண்டு பணிபுரிவர்களுக்கும்அரசுவழங்கியிருக்கும் சட்ட உரிமைகளை எல்லாம் அதிகாரவர்க்கம் எவ்வளவு எளிதாக முறுக்கி வளைத்து குப்பைக் கூடையில் வீசியிருக்கிறது பார்த்தீர்களா? இன்னுமா நாம் பிரமையில் மூழ்கி கிடப்பது! அதிகார வர்க்கத்திடம் கையேந்தினால் ஏதாவது கிடைக்கும் என்று! அறுத்தெறிய வேண்டாமா அந்த வேண்டாத சதைப்பிண்டத்தை!

○ தி. அருள்மணி
கடலூர்.

## காங்கிரசு நகராட்சியின் பித்தலாட்டம்

"மன்னார்குடி நகராட்சி இ.காங்கிரசு கட்சி பொறுப்பில் உள்ளது. ஆணையர் பெயர், விக்டர் தங்கராசா. இந்த நகராட்சியில், தினக்கூலி காவலர் பணிக்கு 8 நபர்களை நியமனம் செய்ய வேண்டியிருந்தது. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மேற்கண்ட பணிக்கு 25 நபர்களை பரிந்துரை செய்தது. அந்த இளைஞர்கள் மிக ஆர்வத்துடன் நகராட்சி நிர்வாகத்தை அணுகிய போது "நாங்கள் ஜூன் மாதமே நியமனம் செய்து விட்டோம்" என்று திமிரான பதில்தான் கிடைத்தது.




ஜூன் மாதம் நியமனம் செய்யப்பட்டபணியிடங்கட்கு ஆகஸ்ட் மாதம் 10 தேதிவரை, மாவட்ட வேலைவாய்ப்பு நிலையம் பரிந்துரை கடித நகல்களை அனுப்பி வைக்கிறது. இது, மாவட்ட வேலைவாய்ப்பு நிலையத்தின் திமிரான பொறுப்பற்ற நடவடிக்கையா? அல்லது நகராட்சி நிர்வாகத்தின் கூட்டுக் கொள்ளையை மூடி மறைக்க நடந்த பித்தலாட்டமா?

இத்த லட்சணத்தில் 'அறிவுக் கொழுந்து' ஆளுநர் தலைமையிலான அதிகாரவர்க்க ஆட்சியே தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று மக்கள் கேட்டுக் கொள்வதாக பம்மாத்து வேறு!

சோம. சிவகுமார்,
மன்னார்குடி.



படிப்பகம்

www.padippakam.com

# அமைதிப்படையின் அக்கிரமங்கள் சர்வதேச மனித உரிமைக் கமிஷனின் அறிக்கை:

# நாளும் தொடரும் நரவேட்டை!

சர்வதேச மனித உரிமைக் கமிஷன், இந்திய ராணுவத்தின் கோர முகத்தை —பாசிசராஜீவ் கும்பலின் தலைமையின் கீழ் கட்ட விழ்த்து விடப்படும் அரசு பயங்கர வாதத்தை—உலகுக்கு இரண்டாவது முறையாக தோலுரித்து காட்டியுள்ளது.

வழக்கம்போலவே பாசிச ராஜீவ்கும்பல் 'இவையெல்லாம் இட்டுக்கட்டப்பட்ட செய்திகள், இந்தியாவின் கௌரவத்தை சர்வதேச அரங்கில் சீர்குலைக்க வீசப்படும் அவதூறுகள்' என கூச்சம் இல்லாமல் புளுகுகிறது. ஆனால் இதுநாள் வரையில், மனித உரிமைக்கமிஷன் சுமத்தும் குற்றசாட்டுகள் பொய்யானவை என்பதற்கு எந்த ஆதாரங்களையும் உலக மக்களின் முன் வைக்கவில்லை, பாசிச ராஜீவ்கும்பல். இந்திய அமைதிப்படையின் மனிதத் தன்மையற்ற இரண்டு படுகொலைகளை இங்கு பார்ப்போம்.

சின்னய்யா குணரத்ன ராஜா, காங்கேசன் துறைமுக பகுதியைச் சார்ந்த ஆலவெட்டையைச் சேர்ந்தவர். 33 வயதுடைய விவசாயி. கடந்த ஜனவரி மாதம் 29ஆம் தேதி காலைப் பொழுதில் மூன்று நட்சத்திர அணி எனப்படும் இந்திய ராணுவத்தின் கைக்கூலி அமைப்பைச் சார்ந்த ஒருவன் சின்னய்யா வீட்டிற்கு சென்றிருக்கிறான். குற்றப்பட்டியலில் இருக்கும் எல்.டி.டி.இ உறுப்பினர்களைப் பற்றியான தகவல் அறிய இந்திய ராணுவத்தினர் சின்னய்யாவை அம்பானை முகாமுக்கு அழைத்துவர சொன்னதாக கூறியிருக்கிறான்.


ஓய்வு பெற்ற போலீசு இன்ஸ்பெக்டரான சின்னய்யாவின் தகப்பனார் பதறிபோய், மகனை உடனடியாக அம்முகாமுக்கு தம்முடன் அழைத்துச் சென்று அங்கிருந்த ராணுவ அதிகாரிகளிடம் விபரம் கேட்டிருக்கிறார். இந்திய ராணுவஅதிகாரிகள் பொறுப்பான எந்தபதிலும் சொல்லாமல் சின்னய்யாவை பிடித்து வைத்துக் கொண்டனர். தெள்ளிப் பாளையம் முகாமுக்கு கடத்திச் சென்றிருக்கின்றனர். பின்னாலேயே சென்ற சின்னய்யாவின் தகப்பனாரை, தெள்ளிப்பாளைய முகாமில் இருந்த இந்திய ராணுவ அதிகாரிகள் 'மறுநாள் வந்து பார்க்கும்படி' கூறியிருக்கின்றனர்.

மறுநாள் சென்றவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. யாருமே சரியான பதில் சொல்லவில்லை. அங்கிருந்து மல்லகம் இந்திய ராணுவ முகாமுக்கு தம் மகனை கொண்டு சென்றிருப்பதாக அறிந்து அங்கு சென்று விசாரித்திருக்கிறார். எந்த பதிலும் இல்லை. தொடர்ந்து 5 நாள் முயற்சித்தும் அவருக்கு தம் மகனைப் பற்றி எந்த விபரமும் கிடைக்கவில்லை.

தொடர்ந்த முயற்சிக்கு பிறகு தம்மகனை தெல்லிப்பாளை ராணுவ முகாமில் சிறை வைத்திருக்கும் தகவல் அறிந்துஅங்குசெல்கின்றனர். கட்டுறுதியான உடல் வாகுடைய அவரது மகன் இரண்டு ராணுவ வீரர்களால் தூக்கிவரப்பட்டு முகத்தை காண்பித்திருக்கின்றனர். அவரால் சுயமாக ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியாதவாறு அவரது உடம்பை கொத்திக் குதறியிருக்கின்றன இந்திய ராணுவ மிருகங்கள். கணுக்கால், பாதங்கள், கால் விரல்கள், முழங்கை, மணிக்கட்டு, கை விரல்கள் அனைத்தும் நசுக்கப்பட்டு தாறுமாறாக வீங்கிப்போய் தொங்கியிருக்கின்றன.

சின்னய்யாவை அந்தக் கோலத்தில் கண்ட குடும்பத்தினர் அலறிபோய் தம்மகனை விடுதலை செய்யுமாறு கெஞ்சியிருக்கின்றனர். ஆனால், இந்திய ராணுவ மிருகங்கள் கொஞ்சமும் குற்ற உணர்வு இல்லாமல் திமிராகவும் தடலடியாகவும் அவர்களது கோரிக்கையை மறுத்திருக்கின்றனர். பிறகு ஒருவழியாக, தினமும் பார்ப்பதற்கு அனுமதி வாங்கி சித்திரவதையால் சிறுக சிறுக சாகும் தம் மகனை 10 நாட்கள் தொடர்ச்சியாக சென்று கவனித்திருக்கின்றனர். பார்க்கப் போகும் போதெல்லாம் தம்மகனுக்கு சிறிது உணவும் மருந்தும்தெரிந்தும் தெரியாமலும் கொடுத்து ஆறுதல் அடைந்திருக்கின்றனர். அதையும் இந்திய ராணுவ மிருகங்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதன்பிறகு தம்மகனைப் பார்க்கவும் அவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

நான்கு நாட்கள் கழித்து ஒரு இந்திய ராணுவ வீரன் வந்து ராணுவ அதிகாரிகள் அவர்களை தெல்லிப்பாளையம் ராணுவ முகாமுக்கு வரச்சொன்னதாக தகவல் சொல்லியிருக்கிறான். முகாமுக்கு


DEATH CERTIFICATE

1. Certified that NATHAN S/O Late Shri Kanagalingam ... LTTE militant who was under custody of Inuvil Post ... to Unit MI Room at Kokuvil today at 0945 hrs in a ... condition with History of loose motion from last three ... Just after two minutes when intravenous fluid was bei... his respiration & pulse suddenly stopped.

2. After all resuscitative measures he could not be ... declared dead/due to sudden cardio-respiratory arrest ... today 16 Jan 88.

(probably


Date - 16 Jan 88
Time : [illegible]

கனகலிங்கம்நாதன்: நரம்பு மூலம் சத்துநீர் செ... போது நாடிதுடிப்பு நின்றுவிட்டதாக இறப்பு ...



சித்திரவதை செய்யப்பட்டு படுகொலைசெய்... சின்னய்யா

MEDICAL REPORTS TO ...
RAPE KEEPING' OF I...




இந்திய அமைதிப் படையினர் தமிழ்ப் பெண்களைக் கற்பழித்தார்கள் என்பதை நிரூபித்து—
இலங்கை அரசு மருத்துவமனையில் கொடுக்கப்பட்ட மருத்துவச் சான்றிதழ்...



படிப்பகம்

www.padippakam.com

சென்ற சின்னய்யாவின் பெற்றோர்களுக்கு ஒரு பேரிடி காத்திருந்தது. ‘‘சின்னய்யா இறந்துவிட்டான்’’ என்று சாதாரணமாக கூறிவிட்டு வெள்ளைத் துணியால் மூடப்பட்ட சின்னய்யாவின் உடலை ஒப்படைத்தனர். அங்கு பிரித்து பார்க்கவும் அனுமதிக்கவில்லை.

திரும்பும்போது, உடலை ஒப்படைத்ததற்கு அவர்களிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டு, சின்னய்யா இறந்து போனதற்கு ஒரு இறப்பு சான்றிதழையும் கொடுத்திருக்கிறது ‘சத்தியம்’ தவறாத இந்திய ராணுவம். ‘‘சுகவீனத்திலிருந்து மீட்க நரம்பூசி போட்டதாகவும், எதிர்பாராமல் இறந்துவிட்டதாகவும். மற்றபடி அவரது உடம்பில் எந்த காயங்களும் இல்லை’’ எனசத்தியம் செய்திருக்கிறது.

ஆனால், சின்னய்யாவின் இறுதிச் சடங்கின்போது எடுக்கப்பட்டபுகைப்படங்கள், இந்திய ராணுவத்தின் அக்கிரமங்களுக்கு இப்போது சாட்சி பகற்கின்றன. உடலை மருத்துவ பரிசோதனைக்கு கொடுக்காமலேயே சிங்கள மருத்துவ அதிகாரியை நிர்பந்தித்து, இந்திய ராணுவம் இறப்பு சான்றிதழ் வாங்கியது இப்போது ஆதாரத்துடன் அம்பலத்திற்குவந்துள்ளது.

● ● ●

**கனகலிங்கம்நாதன்:** வயது 36. உடுவில் கிராம கவுன்சில் அலுவலகத்தில் இரவு நேரக் காவலராக பணிபுரிந்து வந்தவர். ஏற்கனவே, சிங்கள ராணுவத்தால் ’81ஆம் ஆண்டு இறுதியில் கைது செய்யப்பட்டு 6 மாதத்திற்கு பிறகு விடுதலைச் செய்யப்பட்டவர். இதையே காரணமாக வைத்து கைது செய்திருக்கிறது இந்திய ராணுவம்.

கடந்த டிசம்பர் 29ந்தேதி பகல் பொழுதில் அவருடைய சொந்த ஊரான இனுவில் கிராம குடிமக்கள் கமிட்டி உறுப்பினர்கள் முன்னிலையில் அவரை பலவந்தமாக இழுத்துச் சென்றிருக்கிறது.

இரண்டு நாள் கழித்து அவர் மருதாணமடம் இந்திய ராணுவ முகாமில் சிறை வைக்கப்பட்டிருப்பதை அறிந்து அவரது குடும்பத்தினர் அங்கு சென்றிருக்கின்றனர். அவர்களிடம் மறுநாள் பகல் 1 மணிக்கு வந்து பார்க்கும்படி கூறியிருக்கிறது, இந்திய ராணுவம். அதன்படி மறுநாள் சென்றவர்கள் நாதனை பார்க்கஅனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்போது அவர் நல்ல உடல் நிலையில் இருந்திருக்கிறார்.

‘உடுத்துவதற்கு தனக்கு மாற்றுத்துணிகள் இல்லையென்றும் வீட்டிலிருந்து தனது உடைகளை கொண்டு வருமாறும்’ பெற்றோர்களிடம் கூறியிருக்கிறார். அடுத்தநாள் துணிகளுடன் சென்றவர்களை பார்க்க அனுமதிக்காமல், துணிகளை மட்டும் வாங்கி வைத்துக்கொண்டு திருப்பி அனுப்பியிருக்கிறது, இந்திய ராணுவம். இதைத் தொடர்ந்து 10 நாட்களுக்கு மேலாக அவர்களைப்பார்க்கவே அனுமதிக்கவில்லை. ‘விசாரணை முடிந்தால் தாங்கள் சொல்லியனுப்பவதாகவும், அதுவரை யாரும் முகாமுக்கு வரக்கூடாது’ என்றும் அவர்களை மிரட்டி அனுப்பியிருக்கிறதுஇந்திய ராணுவம்.

ஜனவரி 16ந்தேதி, நாதன் ராணுவ முகாமில் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாக வெளியில் வந்தவர்கள் சிலர் சொல்ல, பெற்றோர்கள் முகாமுக்கு சென்றுவிசாரித்திருக்கின்றனர். ராணுவ அதிகாரிகள், ‘‘அவர் ஏற்கனவே இறந்துவிட்டாரே’’என நக்கலாக கூறி ‘‘என்ன? உடலை எடுத்துச் செல்ல போகிறீர்களா?’’ என திமிராக கேட்டிருக்கின்றனர்.

அலறிய பெற்றோர்கள் ‘‘நாதன், எப்படி இறந்து போனான்’’ என கண்ணீர் மல்க கேட்டதற்கு ‘‘சாவதற்கு நேரம் வந்தது! செத்துப்போனான்’’ என்றுகிண்டலாக பதில் சொல்லியிருக்கின்றன ராணுவ மிருகங்கள்.

வழக்கம்போலவே அவர்கள் கையிலும் இறப்பு சான்றிதழைக் கொடுத்திருக்கின்றனர். வயிற்றுப் போக்கால் நாதன் மூன்று நாட்களாகப் பாதிக்கப்பட்டிருந்ததாகவும், நிலைமை கடுமையானவுடன் அருகில் இருக்கும் கொக்குவில் மருத்துவ முகாமுக்கு எடுத்துச் சென்று நரம்பு மூலம் சத்துநீர் செலுத்திய போது திடீரென அவரது நாடிதுடிப்பு நின்றுவிட்டதாகவும் ஒரு சோகக் கதையை எழுதிக் கொடுத்திருக்கின்றனர்.

ஆனால், நாதனின் உடல் முழுக்க திட்டு திட்டாக தீய்ந்து போனதற்கான அடையாளங்கள் இருந்திருக்கின்றன. ‘மின்சாரம் பாய்ச்சிய கம்பியின் மூலம்

**பா**சிச ராஜீவ கும்பலின் 59வது அரசியல் சட்ட திருத்தம் ஒவ்வொரு இந்திய குடிமகனின் உயிர் வாழும் உரிமையும் பறித்துவிட்டது என்று எச்சரித்து நாட்டிலுள்ள ஜனநாயக சக்திகளும்,மனித உரிமை அமைப்புகளும் குரல் கொடுத்தன. பாசிசத்தை தவணை முறையில் கொண்டு வரும் பாசிச ராஜீவ் கும்பலின் கோர முகத்தின் தெளிவான வெளிப்பாடு இது. இதை எதிர்த்து முறியடிப்போம் என கம்யூனிஸ புரட்சியாளர்கள் நாட்டு மக்களுக்கு அறைகூவல் விடுத்தார்கள்.

இப்போது ஐக்கிய நாடுகள் சபையில் துணை கமிஷனின் 46வது கூட்டத்தில் மனித உரிமைகள் பற்றி விவாதித்த ஜெனிவாவில் இயங்கும் சர்வதேச கமிசன் நீதிபதிகள் இந்த உண்மையை உலகுக்கு அறிவித்துள்ளனர். ‘‘சிவில் மற்றும் அரசியல் உரிமைகளின் சர்வதேச கூட்டமைப்பின் உறுப்பினராக உள்ள இந்தியா 59வது அரசியல் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்ததன் மூலம் தனது கடமை பொறுப்பை தானே மீறிவிட்டது...இந்த திருத்தம் இந்தியாவில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். இந்தியா அழிவை நோக்கியான வளர்ச்சியில் போய்க் கொண்டிருக்கிறது. **இந்த சட்டத் திருத்தம் இந்திய அரசியல் சட்டத்தின் 21வது** பிரிவு வழங்கியுள்ள குடிமக்கள் உயிர் வாழும் உரிமையையும் மற்றும் தனி மனித சுதந்திரத்தையும் சர்வ சாதாரணமாக பறித்துவிட்டது. இந்த சட்டத்தின் மூலம் இந்தியாவில் முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியிலோ அவசர நிலையைப் பயன்படுத்த முடியும். அதன் பிறகு சட்ட விரோதமாகவோ, தவறாகவோ ஒருவர் கைது செய்யப்பட்டால் அவரை நீதிமன்றத்தின் முன் ஒப்படைக்க வேண்டும் என்று அரசின் மீது வழக்குத் தொடுக்க முடியாது. இந்த சட்டத் திருத்தம் பஞ்சாபில் மட்டும்தான் தலையிடும் என்ற எந்த உறுதியும் இந்த சட்டத் திருத்தத்தில் இல்லை. இதனால் காரணமின்றி கைது செய்யப்படுவதும், சித்திரவதை செய்யப்படுவதும், கைது செய்யப்பட்டவர் காணாமல் போவதும் அதிகரிக்க அதிக வாய்ப்புள்ளது’’ என்று அங்குலம் அங்குலமாக பிய்த்துக் காண்பிக்கிறது.

இந்திய அரசு மறுபரிசீலனை செய்து 59வது சட்டத் திருத்தத்தை திரும்பப் பெற்று அரசியல் சட்டத்தின் 21வது பிரிவை பாதுகாக்க வேண்டும் எனவும் கோரியுள்ளது.

இது மட்டுமல்ல, ஆகஸ்ட் இரண்டாவது வாரத்தில் கூடிய சர்வதேச மனித உரிமைக் கமிஷன் இந்தியாவில் மனித உரிமைகள் மீறப்படுவது பற்றியான இன்னொரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே உலக மக்களின் முன் அம்பலப்பட்டுப் போயுள்ள இந்திய அரசின் உரிமை மீறல்கள் இந்த அறிக்கைகள் மூலம் மேலும் திரை கிழிக்கப்பட்டு இருந்த பிரமையும் சரிந்து போயுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com




உடம்பு முழுவதும் சுட்டதற்கான காயங்கள் தான் அது' என பார்த்தவர்கள் உறுதிப்படுத்தியிருக்கின்றனர். மேலும் அவரது இடது தோள் பட்டையின் மூட்டு கழண்டுப் போய் வீங்கியும், இரண்டு கால் முழுக்கவும் பின் பகுதியிலும் காயங்கள் இருந்திருக்கின்றன.

ஒன்று இரண்டல்ல, பல பத்து நூறு படுகொலைகள் தினம் தினம் ரகசியமாக இந்திய ராணுவத்தால் அரங்கேற்றப்படுவதாக சர்வதேச மனித உரிமைக் கமிஷன் குற்றம் சாட்டியுள்ளது. டிசம்பர் 87 லிருந்து ஜனவரி 88 வரை இவ்வாறான படுகொலைகள் கணக்கு வழக்கற்ற முறையில் நடந்ததாக மனிதஉரிமைக் கமிஷன் பட்டியலிடுகிறது. ஒருவர் இந்திய ராணுவத்தால் கைது செய்யப்பட்டால், அதன் பிறகு அவர் காணாமல் போவதும், சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்படுவதும் சர்வசாதரணமாகி விட்டது என்று கூறுகிறது.

இதே போல, சொந்த நாட்டில் அமைதி ஏற்படுத்துவது என்ற பெயரில், மதவெறி பயங்கரவாதிகளை ஒடுக்குவது என்ற பெயரில் அப்பாவி சீக்கிய மக்களை கைது செய்வதும், சித்திரவதை செய்து படுகொலை செய்வதும், கைது செய்யப்பட்டவர்கள் காணாமல் போவதும் நாளுக்கு நாள் அதிகமாகி விட்டது என அடுத்தடுத்து ஆதாரங்களுடன் அம்பலப்படுத்துகிறது சர்வதேச மனித உரிமைக் கமிஷன்.

சர்வதேச மனித உரிமைக் கமிஷனின் புகார் பற்றி, எதிர் கட்சிகள் ராஜீவ் கும்பலிடம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய போது கிடைத்த பதில் என்ன தெரியுமா? "சர்வதேச மனித உரிமைக்கழகம் போன்ற அமைப்பு—அதன் அறிக்கைக்கெல்லாம் இந்திய அரசாங்கம் பதில்சொல்லிக் கொண்டிருக்கமுடியாது!... இம்மாதிரியான அமைப்புகளின்குறிக்கோள் என்ன? அதன் பின்னால் இருப்பது யார்? என்பதெல்லாம் இந்தியாவுக்கு தெரியும்!...இந்திய அரசாங்கம் அதன் நாடாளுமன்றத்துக்குத் தான் பொறுப்பானதாக இருக்கும்!" என்று சவடால் அடித்து எதிர் கட்சிகளின் வாயை அடைத்தது.

தென்னாப்பிரிக்க வெள்ளை நிறவெறி பயங்கரவாத போத்தா அரசும் இதே முறையில்தான் உலக மக்களின் வாயடைக்கமுயற்சிக்கிறது.பாசிஸ்ட்டுகள் எல்லாம், எங்கும் ஒரே மாதிரிதான் சிந்திக்கிறார்கள், செயல்படுகிறார்கள். இதற்கு ராஜீவ் கும்பலும் விதிவிலக்கல்ல!

● பச்சையப்பன்

# ஆட்டோ சங்கர் விவகாரம்: 'ஜூனியர் விகட'னின் இடைத்தரகு வேலை

சென்னை — திருவான்மியூர் சமூக விரோதி "ஆட்டோ" சங்கர் விவகாரம் வழக்கமானதொரு கிரிமினல் குற்றச் செய்தி—வழக்கு என்று ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. கள்ளச்சாராயம் பெண்களைக் கடத்துவது, கற்பழிப்பது. விபச்சாரம், கொலை, வியாபாரிகளிடம் கட்டாய கப்பம் வசூல், கூலிக்குக் குண்டர் படையாக செயல்படுவது—இப்படிப்பட்ட பல சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்ட "ஆட்டோ" சங்கர் கும்பலுக்கு உடந்தையாகவும், பங்காளிகளாகவும் பல எம்எல்ஏக்கள், எம்பிக்கள் மந்திரிகள், போலீசு உயர் அதிகாரிகள், நடிகர்—நடிகைகள் இருந்துள்ளனர்.

திட்டமிட்ட ஒரு வலைப் பின்னலாக அமைந்து இவர்கள் பல சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்திருக்கின்றனர்.

● போலீசின் பாதுகாப்போடு மிகப் பெருமளவில் கள்ளச் சாராயம் காய்ச்சி சென்னை நகர் முழுவதும் வியாபாரம் செய்துள்ளார்கள். ஒரு வட்டாரக் குடிசைவாழ் மக்கள் பலருக்கும் பணமும், இலவசமாகக் கள்ளச் சாராயமும் கொடுத்து தமது கிரிமினல் குற்றங்களுக்கு உடந்தையாகமாற்றினார்கள்.

● சினிமா ஆசை, காதல் விவகாரம், குடும்பத் தகராறு காரணமாக சென்னைக்கு ஓடி வந்து தனியே தவிக்கும் பெண்கள், இரவிலே தனியே போகும் பெண்கள், தம்பதிகள் ஆகியோரைக் கடத்திப் போய் கற்பழித்து கட்டாயப்படுத்தி விபச்சாரத்தில் தள்ளினார்கள்.

● சென்னை—திருவான்மியூர் புறநகர் பகுதியில் தனியே பஸ் நிலையங்களில் வந்திறங்கும்பெண்கள், அந்தப் பகுதியில் கணவர்—உறவினர் வேலைக்குச் சென்று விட்ட பிறகுவீடுகளில் தனித்திருக்கும்பெண்கள் ஆகியோரைரௌடிகளைஏவி கடத்தி, கற்பழித்து, கட்டாயப்படுத்தி விபச்சாரத்தில் தள்ளினார்கள்.

● இப்படிப்பட்ட பெண்கள்தவிர சினிமா நடிகைகள் உட்பட நான்கு மாநிலங்களில் இருந்து வரும் தொழில்முறை விபச்சாரிகளையும் வைத்து சென்னையிலிருந்து மகாபலிபுரம் வரை பல விபச்சார விடுதிகளை வைத்து நடத்தினார்கள். இதற்குப் போலீசின் பாதுகாப்பும், பங்கும் இருந்தது.

● எம்எல்ஏக்கள், எம்பிகள், மந்திரிகள் மற்றும் உயர் போலீசு அதிகாரிகள் பலருக்கும் விபச்சாரிகளை அனுப்பியும் லஞ்சம்கொடுத்தும் தனது சமூக விரோதச் செயல்களுக்குப் பங்காளிகளாக்கினர்.

● ஆபாச—நிர்வாண சினிமாப் பிடித்ததும், புகைப்படங்கள் எடுத்தும் வியாபாரம் செய்துள்ளனர். கிரிமினல் குற்றங்களில் சிக்கிக் கொண்டால் (பிளாக் மெயில் செய்து) மிரட்டித் தப்பித்துக் கொள்வதற்காக மந்திரிகள், எம்எல்ஏக்கள், எம்பிக்கள் மற்றும் உயர் போலீசு அதிகாரிகளின் ஆபாசக் கூத்துக்களையும் வீடியோ மற்றும் புகைப்படங்கள்எடுத்தனர்.

● கற்பழிக்கவும், விபச்சாரத்தில் ஈடுபடுத்தவும் பெண்களுக்கு போதை ஊசிகள் போட்டனர். தமது ஆபாச - வக்கிரசேட்டைகளுக்காக பெண்களைசித்திரவதை செய்தனர். தொழில் போட்டி காரணமாக பல படுகொலைகளைக் குரூரமான முறையில் செய்தனர்.

● சென்னை — திருவான்மியூர் வட்டாரத்தில் வியாபாரிகளிடம் கட்டாய கப்பம்வசூலித்தனர். கூலிப் படையை வைத்துக்கொண்டு தமது தொழில் எதிரிகளையும், அப்பாவி மக்களையும் தாக்கினர்.



படிப்பகம்

www.padippakam.com

# ஆட்டோ சங்கரின் இன்னொரு பக்கம்...

## ஒரு கொலைகார ராபின்ஹூட்..?!

ஜூனியர் விகடன்

● இந்தச் சமூக விரோதச் செயல்களைத் தொடர்ந்துநடத்துவதற்காக பல அரசியல் கட்சிகளுக்கு நிதியும், அரசியல் தலைவர்கள் மற்றும் உயர் போலீசு அதிகாரிகளுக்கு ஏராளமாக மாமூலும் பரிசுகளும் கொடுத்தனர். விபச்சாரிகளும், பங்களாக்களும், லாரிகளும்கூட பரிசுப் பொருட்களில் அடங்கும்.

இந்தக் கிரிமினல் குற்றங்களுக்காக நாட்டிலேயே அதிகபட்சமான தண்டனைக்குரியவர்கள் "ஆட்டோ" சங்கர் கும்பலும் அதன்பங்காளிகளும். அதேசமயம் இந்தக் கிரிமினல் குற்றங்களை அறிந்தும் அவற்றை மறைப்பதும், குற்றவாளிகளைத் தப்புவிப்பதற்கு மறைமுகமாக, நேரடியாக உதவுவதும் தண்டனைக்குரிய கிரிமினல் குற்றமாகும். அத்தகைய கிரிமினல் குற்றத்தை மாநிலத்தின் கவர்னர், உயர் போலீசு அதிகாரிகள், முதலாளித்துவபத்திரிக்கைகள், குறிப்பாக ஜூனியர்விகடன் பத்திரிக்கை ஆகியோர் செய்கின்றனர்.

"ஆட்டோ" சங்கர் விபச்சாரத்தில் சம்பந்தப்பட்டவர்கள் எவ்வளவு பெரியவர்கள் ஆனாலும் நடவடிக்கை எடுக்கப்படும், தண்டிக்கப்படும் என்று அறிவித்தார் அலெக்சாண்டர். தனது கிரிமினல் குற்றங்களில் "ஆட்டோ" சங்கர் கும்பலும் அதன் மாமூலும் பரிசும் பெற்றபங்காளிகளும் சம்பாதித்தற்கு மேலேயே அந்தச் செய்திகளை வைத்து வியாபாரம் செய்துவிட்டன பத்திரிக்கைகள். ஆனால் சம்பந்தப்பட்டவர்கள் யார் யார், அவர்கள்மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன? எந்த நடவடிக்கையும் இல்லை. எந்தச் செய்தியும் அதிகாரபூர்வமாக இல்லை. "ஆட்டோ" சங்கருடன் சேர்ந்த சில கொலையாளிகள், அவனுடன் விபச்சாரக் கூட்டுத் தொழில் செய்த சில விபச்சாரிகள் பிடிக்கப்பட்டுள்ளனர். இவர்களிடம் எல்லாம் கடுமையாக விசாரிக்கப்படுகிறது, புதியதகவல்கள்—ஆதரங்கள்சிக்கியுள்ளன, போலீசு உளவுப்படை பலஊர்களுக்கும் பறக்கிறதுஎன்று செய்தி வெளியிடுகிறார்கள். சந்தேகத்துக்குரிய விபச்சாரத் தரகர்களையும், விபச்சாரிகளையும் வேட்டையாடும் போலீசு நாய்கள் சந்தேகத்துக்குரிய அரசியல்வாதிகளையும் போலீசு அதிகாரிகளையும் என்ன செய்தது? ஏன் கைது செய்யவோ, விசாரிக்கவோ, அதுபற்றி செய்திகள் வெளியிடவோ மறுக்கின்றன? உள்ளூர் மக்களின் நிர்பந்தம் காரணமாக இரு இன்ஸ்பெக்டர்களையும் ஒரு டி.எஸ்.பியையும் முதலில் இடமாற்றம் செய்தார்கள் பிறகு தற்காலிக நீக்கம் செய்தார்கள்.

உள்ளூர் கிரிமினல் குற்றவாளியைப் பற்றிய பரபரப்பான செய்திகள் வெளியிட்டு வியாபாரம் செய்து கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் எலிவேட்டைக்குப் புறப்பட்ட அலெக்சாண்டரின் ஏவல்கும்பலுடன் எச்சில் பொறுக்கப் போனது ஜூனியர் விகடன் தான்தான் இந்த விவகாரத்தை வெளியே கொண்டு வந்தது என்று பீற்றிக்கொண்டது. "ஆட்டோ" சங்கர் விவகாரத்தில் போலீசு அதிகாரிகளும் பங்காளிகள் என்று தெரிந்ததும், டி.ஐ.ஜி. ஜபார் அலி கேட்டுக் கொண்டதற்கேற்ப அவர்கள் யார் யார் என்பதை மூடி மறைத்தது. பல அரசியல்வாதிகளும் பங்காளிகளாக இருந்தனர் என்பதை தெரிந்தும் மறைத்தது. அதன் பிறகு "ஆட்டோ" சங்கரின் இன்னொரு பக்கம் என்று திருவான்மியூர் பகுதியில் "ஆட்டோ" சங்கர் செய்து வந்த தானதர்மங்கள், அவனுக்குள்ள "மக்கள்" ஆதரவு ஆகியவற்றை தொகுத்துக்கொடுத்து "ஆட்டோ சங்கர் ஒரு ராபின்ஹூட்" (அதாவது பணக்காரர்களிடம் அடித்துப் பிடுங்கி ஏழைகளுக்கு தான தர்மம் வழங்கும்பரோபகாரி) என்பதாகஎழுதியது. வேறு எந்தப் பத்திரிக்கைக்கும் கிடைக்காத உரிமை பெற்று "ஆட்டோ" சங்கரைப்பேட்டி கண்டு அவனது குற்றங்களை நியாயப்படுத்தும் வாதங்களை வெளியிட்டது.

சென்ற வாரம், "திகைக்க வைத்த வீடியோ" என்றொரு செய்தியை ஜூனியர்விகடன் வெளியிட்டது. "ஆட்டோ" சங்கர் விவகாரத்தில் சம்பந்தப்பட்ட ஒரு அதிகாரி போன் செய்து ஜூனியர் விகடனை அழைத்தார். போனபோது இரு முன்னாள் எம்எல்ஏக்களுடன் வரவேற்ற அந்த அதிகாரி இரண்டு வீடியோ படங்களைப் போட்டுக் காட்டினார். ஒன்றில் ஆட்டோ சங்கர் வீட்டு விழாவில் பல போலீசு அதிகாரிகளோடு ஒரு உயர் போலீசு அதிகாரி தோள் மீது கைபோட்டு அவனுடன் கூடிக் குலாவியது இருந்தது. மற்றொன்றில் இன்றும் முன்னணியிலுள்ள ஒரு சினிமா நடிகையுடன் ஒரு எம்எல்ஏ ஆபாசக் கூத்தடித்தது இருந்தது. இவை தவிர விபச்சாரிகளுடன் ஆபாச நிலையில் பல முக்கிய புள்ளிகள் இருந்த புகைப்படத் தொகுப்பையும் அவர்கள் காட்டினார்கள். "அந்த அதிகாரிதான் "ஆட்டோ" சங்கரை வளர்த்து விட்டார். வேறுவழியின்றி நானும் பங்கு வாங்கினேன். இப்ப எங்களை மட்டும் மாட்டிவிட்டுட்டு அவங்க தப்பிக்கப் பார்க்கறாங்க... இது நியாயமா? மாட்டினா எல்லோரும் மாட்டனும் இல்லேன்னா எல்லோரும் தப்பிக்கணும்" என்று சொன்னார் போலீசு அதிகாரி. "எங்களைப் பத்தின வீடியோ படம் கவர்னர்கிட்டே போறதுக்குள்ளே இது போய்விடும்" என்றும்சொன்னார். "ஆட்டோ" சங்கர் இப்போது சிறையில் "சகல வசதி"களோடு இருப்பதாகவும் சொன்னார்.

—இவை ஜூனியர்விகடன் எழுதிய செய்திகள். வீடியோக்களிலும் புகைப்படத் தொகுப்பிலும் தான் பார்த்த நபர்கள் யார் யார் என்றோ, இப்படிக் கூப்பிட்டுக் காட்டிய அதிகாரி மற்றும் முன்னாள் எம்எல்ஏக்கள் யார் யார் என்றோ, ஜூனியர் விகடன் வெளியிடவில்லை. வீடியோக்களிலும், புகைப்படத் தொகுப்பிலும் ஒரு பிரதி கொடுங்கள், பெயர் குறிப்பிட்டு எல்லாவற்றை

படிப்பகம்

www.padippakam.com

யும் எழுகிறோம் என்று ஜுனியர் விகடன் கேட்டதற்கு அவர்கள் மறுத்துவிட்டார்கள். ஆதாரங்கள் இல்லாததால் பெயர் குறிப்பிட்டு தான் எழுதவில்லை என்று ஜுனியர் விகடன் நழுவிக் கொண்டுள்ளது.

‘‘மாட்டினா எல்லோரும் மாட்டனும்...இல்லேன்னா எல்லோரும் தப்பிக்கனும்’’ என்ற இந்த பேரத்துக்கு இடைத்தரகு வேலை செய்யும் வேலையை ஜுனியர் விகடன் ஏற்றுக் கொண்டுள்ளது. அதாவது ‘‘ஆட்டோ’’ சங்கர் சமூகவிரோத கும்பலின் பங்காளி கள் யார், யார் என்கிற முழு விவரமும் அறிந்துள்ள ஜுனியர் விகடன் இரண்டு தரப்புகளிடமும் ஒன்றிற்கு எதிராக மற்றொன்றிடன் ஆதாரங்கள் இருக்கின்றன என்கிற அளவுக்கு மட்டும் செய்தி வெளியிட்டு விட்டு பேரம் நடப்பதற்கான அடிப்படையை மேடையை அமைத்துக் கொடுத்துள்ளது.

‘‘தராசு’’ பத்திரிக்கையாவது தனது வழக்கமான கிசுகிசுப்பாணியிலே டிஎஸ்பி தங்கையன், எஸ்.பி சுப்பையா, டி.ஐ ஜி கணபதி ஆகியோருக்கும் மாமூல் போனது; இந்திரா காங்கிரஸ் பொதுச் செயலாளரும் எம்பியுமான திண்டிவனம் ராமமூர்த்தி, ஆலந்தூர் நகர சபை திமுக தலைவர் பாரதி,ஜெயலலிதா அணியின்துரை. ராமசாமி, உக்கம்சந்த் உட்பட சில எம்எல்ஏ கள், ஜானகி அணியின் தாமரைக் கனி, கே.பி ராமலிங்கம் உட்பட சில எம்எல்ஏக்கள் ஆட்டோ சங்கரிடம் தொடர்பு கொண்டிருந்தனர் என்று எழுதியது. ஆனால் கிரிமினல் குற்றவாளிகள் யார்யார் என்கிற உண்மை மக்களுக்குத் தெரிவிக்காமல் அதே சமயம் பகிரங்கமானதொரு பத்திரிக்கை மூலம் பேரம் நடத்த ஏற்பாடு செய்து தரும் ஜுனியர் விகடனை அதன் பாணியிலேயேசொன்னால் ‘‘பலே கில்லாடித்தரகன்!’’

தனது பத்திரிக்கைவியாபாரத்துக்குத் தேவையான சரக்குகளை கொடுத்த ‘‘ஆட்டோ’’சங்கருக்கு நன்றி மறவாமல் ‘‘ராபின்ஹூட்’’ பட்டம் வழங்கி சிறப்பித்தது ஜுனியர் விகடன். அதற்கு எதிராக வாசகர்கள் எழுதியபோது தனது பத்திரிக்கை தர்மத்தை அறிவித்துள்ளது. ‘‘நம்மைப் பொறுத்த வரையில் எதைக் குறித்தும் தீர்ப்புவழங்குவது நம்வேலை இல்லை! நாட்டில் நடப்பவற்றை—அவை நல்லதோ கெட்டதோ—அப்படியே ‘‘ரிப்போர்ட்’’ செய்வது மட்டுமே பத்திரிக்கையாளர் கடமை’’ என்று உத்தம—பத்தினி வேஷம் போடுகிறது ஜுனியர் விகடன். இதே பாலசுப்பிரமணியத்தை ஆசிரியராகவும், மதனை இணை ஆசிரியராகவும் கொண்டு வெளிவரும் சீனியர் ஆனந்தவிகடனில் தலையங்கமும் கருத்துப்படமும் தீட்டுகிறார்களே அது தீர்ப்பு இல்லையா? ‘‘ராபின்ஹூட்’’ என்று வர்ணிப்பதும் செய்திகளுக்கு முக்கியத்துவமளிக்கும் முறையும் தீர்ப்பு இல்லையா?

‘‘நாட்டில் நடப்பவற்றை—அவை நல்லதோ கெட்டதோ—அப்படியே ‘ரிப்போர்ட்’ செய்வது மட்டுமே பத்திரிக்கையாளர் கடமை’’ என்று பத்திரிக்கை தர்மம் பேசும் ஜுனியர் விகடனுக்கு ‘‘ஆட்டோ’’ சங்கர் விவகாரத்தில் சம்பந்தப்பட்ட முக்கிய புள்ளிகளான குற்றவாளிகள் யார் யார் என்று தெரியுமே, அதை அப்படியே ‘‘ரிப்போர்ட்’’ செய்யாமல் அவர்களும் கேட்டுக் கொண்டபடி விசுவாசமாக மூடி மறைக்கிறதே அது எந்தவகை பத்திரிக்கை தர்மம்? சாதாரண மக்களின் விவகாரம் என்றால் சமூகச் சேவை என்கிற பெயரில் கண்டதையும் கேட்டதையும் மட்டுமே ஆதரமாகக் கொண்டு எழுதும் அதே சமயம் முக்கியப் புள்ளிகள் என்றால் முக்காடுபோட்டுக்கொள்கிறதே இதுதான் ஜுனியர் விகடனின் உண்மை முகம்.

வீழ்ந்து கிடக்கும்தமிழ்நாட்டு நிர்வாகத்தை தூக்கி நிமிர்த்தும் சூரப்புலியாக நடிக்கும் அலெக்சாண்டர், தன்னிடம் புகார் வந்ததும் உடனடியாக நேர்மையாக நடவடிக்கை எடுப்பதாகக் காட்டுவதற்காக ‘‘ஆட்டோ’’ சங்கர் விவகாரத்தைத் தோண்டும்படி உத்திரவு போட்டார். ஏதோ ஒரு சிறு கிரிமினல் கும்பலைப் பிடிக்கும் போலீசு—நிர்வாக வேலையாக இருக்கும் என்று புறப்பட்ட அலெக்சாண்டர், போலீசு நாய்களை ஏவினார். வேட்டைக்காரனோடு ஒட்டிக் கொண்டு எச்சில் சோற்றுக்கு அலையும் எடுபிடி போல ஜுனியர் விகடனும் போனது.

இவர்கள் எலி வேட்டைக்குப் போன இடத்தில் மனிதர்களை அடித்துத் தின்னும் புலிகள் வந்து நின்றதைப் போல அரசியல்வாதிகளும், உயர்போலீசு அதிகாரிகளும் ‘‘ஆட்டோ’’ சங்கர் கும்பலின் பங்காளிகளாக நின்றிருக்கிறார்கள். மீன்பிடிக்க வீசியவலையில் திமிங்கலம் சிக்கியிருக்கிறது. எலிகள் வேண்டாம் ஆளைவிட்டால் போதும், மீன் வேண்டாம் வலை தப்பினால் போதும் என்கிற ரீதியில் சூரப்புலி அலெக்சாண்டரும் அவருடைய ஏவல் நாய்களும் எடுபிடிகளும் நடந்து கொள்கிறார்கள.

● மனோகரன்

## சட்டபூர்வ பகற்கொள்ளை

தவமணி. கன்னியாகுமரி மாவட்டத்தில் அஞ்சு கிராமம் என்ற ஊரில் இருக்கும் ஒரு ‘குட்டிக் காவல்’ நிலையத்தின்எஸ்.ஐ. இவர். தேவர் சாதியை சேர்ந்த இவர், அதே சாதியைச் சேர்ந்த உயர் அதிகாரிகளை கைக்குள் போட்டுக் கொண்டு அஞ்சி கிராமத்தில் செய்து வரும் அட்டூழியங்கள் சொல்லி மாளாது.

கள்ளச் சாராயம் விற்பவர்களை பிடிப்பதாகச் சொல்லிக் கொண்டு சாலைகளில் செல்லும் எவரையும் விட்டு வைப்பதில்லை. கூலி வேலை செய்துவிட்டு திரும்பும் ஏழைகள், பெண் தொழிலாளர்கள், சிறுவர்கள் என கையில் கிடைப்பவர்களை பிடித்துச் சென்று போலீசு நிலையத்தில் வைத்து உறவினர்களிடம் பணம் பறித்துக் கொண்டு பிறகு வெளியில் விடுவதை தனது முழு



நேரத் தொழிலாக செய்து வருகிறார்.

இவரது தொழிலுக்கு உதவியாக 24 மணி நேரமும் ஊரைச் சுற்றி வர சில அடியாட்களை வேறு அமர்த்தியிருக்கிறார். எஸ்.ஐ. பேரைச் சொல்லி அக் கும்பல் செய்யும் அட்டகாசத்தால் ஊரே பீதியடைந்திருக்கிறது. தெருவில் விளையாடிக் கொண்டிருக்கும் சிறுவர்களைக் கூட பிடித்துச் சென்று அவர்களுடைய பெற்றோர்களிடம் ரூபாய் 300, 500என பிடுங்கிக்கொள்கின்றனர். மறுப்பவர்கள் மீது பொய் வழக்கு, கோர்ட்டு, கேசு என மிரட்டல் வேறு.

கள்ளச்சாராயம் விற்பவர்களைஒடுக்கவே இப்படி கறாராக நடந்து கொள்வதாக சொல்லும் இந்த யோக்கிய சிகாமணிகளின் கண்ணில் கள்ளச் சாராயம் விற்பவர்கள் மட்டும் மாட்டுவதே கிடையாது! இவர்கள் கண்ணெதிரேலேயே ‘காக்கா’ என்பவன் கள்ளச் சாராயம் காய்ச்சி ஊருக்கே ‘சப்ளை’ செய்து வருகிறான். இருந்தும் அவனை இன்றுவரை எந்த போலீசுநாயும் பிடித்தது கிடையாது! அவர்களுக்குள் இருக்கும் ‘தொழில்’ கூட்டை மக்கள் உணர்ந்துதான் இருக்கிறார்கள்.ஆனால்எதிர்க்கத் தான் தயங்குகிறார்கள். இந்த தயக்கம் வெகுநாட்கள் நீடிக்காது என்பது தவமணி கும்பலுக்கு தெரியவாய்ப்பில்லைதான்!

படிப்பகம்

www.padippakam.com

# இன்னுமொரு துரோக ஒப்பந்தம்

பஞ்சாப் ஒப்பந்தமும் ஈழ ஒப்பந்தமும் துப்பாக்கி குண்டுகளால் துளைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் போது, 'அமைதியான' முறையில் நிறைவேறிய கோர்க்கா ஒப்பந்தத்தைப்போலவே, இன்னுமொரு துரோக ஒப்பந்தத்தை ரகசியமாகச் சாதித்துள்ளது பாசிச ராஜீவ் கும்பல். திரிபுரா தீவிரவாதிகளை விலைக்கு வாங்கி, யாருக்கும் தெரியாமல் ரகசியமாக பேச்சுவார்த்தை—பேரம் நடத்தி, சதிமுறையிலேயே இந்த ஒப்பந்தத்தை சாதித்துள்ளது.

கடந்த ஆகஸ்ட் 12ம் நாளன்று திரிபுராவில் மலைவாழ் பூர்வீக குடிகளின் உரிமைக்காக ஆயுதமேந்திப் போராடி வந்த 'திரிபுரா தேசிய மலைவாழ் சேவகர்கள்' (TNV) எனப்படும் தீவிரவாத அமைப்புக்கும் மத்திய—மாநில அரசுகளுக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளதாக அறிவித்தார் உள்துறை அமைச்சர் பூடாசிங். இச்சமரச உடன்பாடு பற்றிய முன்னறிவிப்போ, சமிக்ஞைகளோ இல்லாத நிலையில் இது எப்படி சாத்தியமானதுஎன்று அதிசயித்து எதிர்க்கட்சிகள் கூட பாராட்டின.

1947க்கு முன் திரிபுராவில் பூர்வீக மலைவாழ் மக்கள் 90சதவீதத்தினராக இருந்தனர். 47ல் ''சுதந்திரமும்'', இந்திய—பாகிஸ்தான் பிரிவினையும் ஏற்பட்ட போதுகிழக்குபாகிஸ்தானிலிருந்து [இன்றைய பங்களாதேஷ்] ஏராளமானவங்காளிகள் தப்பியோடி வந்துதிரிபுராவில் குடியேறினர். பின்னர் மே.வங்கத்திலிருந்தும் வர்த்தகர்களாகவும்,அரசுஊழியர்களாகவும் ஏராளமானோர் குடியேறினர். இதனால் திரிபுராவின் பூர்வீக குடிகள் மொத்த மக்கட் தொகையில் 30 சதவீதமாக சிறுத்துப் போயினர். வறுமையும் வேலையின்மையும் காரணமாக தங்கள் நிலத்தையும் உடமைகளையும் இழந்து ஓட்டாண்டிகளானார்கள். வங்காளிகளின் ஆதிக்கம் படிப்படியாக உயர்ந்தது. இதோடு எல்லைப்புற மாநிலம் என்று காரணம் காட்டி காங்கிரசு மத்திய அரசு எந்த வளர்ச்சிப் பணிகளையும் மேற்கொள்ளாமல் திரிபுரா பூர்வீக குடிகளை மேலும் பின்னிலைக்குத் தள்ளியது.

இதன் விளைவாக திரிபுரா மலைவாழ் மக்களின் உரிமைக்காகப் போராட 1977ல் திரிபுர உபஜதி ஜுபா சமிதி (TUJS)என்ற கட்சி உருவாகியது. பின்னர் 1978ல் அதிலிருந்து பிரிந்து தீவிரவாதப் பாதையை மேற்கொண்ட 'திரிபுராமலைவாழ்மக்கள் தேசிய சேவகர் படை'TNV உருவானது. இவ்வமைப்பு தங்கள் நோக்கங்களைச் சாதிக்ககுறுகிய இனவெறியைக் கட்டவிழ்த்து விட்டு மலைவாசிகள் அல்லாத அப்பாவி விவசாயிகளை கொன்றொழித்தது.

1988லிருந்து 1988க்குள் குறைந்தபட்சம் 500 பேர் படுகொலை செய்யப்பட்டனர். இதோடு காங்கிரசு குண்டர்கள் அன்று அதிகாரத்திலிருந்த 'மார்க்சிஸ்டு' ஆட்சியைக் கவிழ்க்க திரிபுரா உபஜதி சமிதியுடன் கூட்டு சேர்ந்து கொண்டு இத்தீவிரவாத அமைப்பைகொம்பு வீசி விட்டனர். அதன்பிறகு 'மார்க்சிஸ்டு' கட்சி தொண்டர்களும், தலைவர்களும் இத்தீவிரவாதிகளுக்கு இலக்காயினர்.

இப்போது காங்கிரசு—உபஜதி சமிதி கூட்டணி ஆட்சி ஏற்பட்ட பிறகு இத்தீவிரவாத அமைப்பு தொடர்ந்து நீடிப்பது அபாயம் என்று ரகசியமாக பேரம் நடத்தி ஒப்பந்தம் போட்டுள்ளனர். 400க்கும்மேற்பட்ட கொரில்லாக்களைக் கொண்ட இந்த அமைப்பின் சார்பில், ஆயுதங்களை கொடுத்து சரணடையவும், இனி வன்முறையில் ஈடுபடமாட்டோம் என்றும், வேறெந்த தீவிரவாத அமைப்பையும் ஆதரிக்கமாட்டோம் என்று காலில் விழாத குறையாகமுற்றாக சரணடைந்து ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளார் இவ்வமைப்பின் தலைவர் விஜய்குமார் ஹராங்கவால். ஆயுத கையளிப்பு இம்மாதத்தில் கோலகலமாக நடத்தப்படுமென அரசு அறிவித்துள்ளது.

திரிபுராவில் மொத்தமுள்ள 60 சட்டமன்றத் தொகுதிகளில் 50 சதவீதத்தை மலைவாழ் மக்களுக்கான ரிசர்வ் தொகுதியாக்ககோரி வந்த இவ்வமைப்பினர், இந்த ஒப்பந்தத்தில் ஏற்கனவே உள்ள 17 தொகுதிகளுக்குப் பதிலாக 20 தொகுதிகளை ரிசர்வ் தொகுதிகளாக, மத்திய அரசு அறிவித்ததை வெட்கமின்றி ஏற்றுள்ளனர்.

ஜனவரி1, 1960 முதலாக நிலப்பரிவர்த்தனை செல்லாது என அறிவித்து மலைவாழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட நிலங்கள் திரும்பகொடுக்கப்பட வேண்டும் என இவ்வமைப்பும் உபஜதி சமிதியினரும் கோரி வந்தனர். 'மார்க்சிஸ்டு' அரசு 1969லிருந்து கணக்கிடுவதற்கு இசைந்தது. ஆனால் அதைக்கூட ஏற்காமல் போராடிய இவ்வமைப்பினர் இன்று,ஆண்டுபற்றிய எந்த குறிப்பும் இல்லாமல், ''உரிய நடவடிக்கை எடுக்கப்படும்'' என்ற பாசிச கும்பலின் வார்த்தைகளை நம்பி தங்கள் கோரிக்கைகளையே அடகு வைத்து ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

இப்படி மலை வாழ் மக்களின் நலன்களை கோரிக்கைகளை அடகுவைத்து உருவான இந்தஒப்பந்தத்திற்கான பேச்சு வார்த்தைகள் மே மாதத்திலேயே துவங்கியதாம். இறுதிக்கட்ட பேச்சுவார்த்தைகள் டெல்லியில் நடந்ததாம். ஆனால் அனைத்துமே மிக ரகசியமாக வைக்கப்பட்டிருந்ததாம். இதில் வேடிக்கை என்னவென்றால் திரிபுரா காங்கிரசு முதல்வருக்கேகூட இது பற்றி தெரியாதாம். எல்லா பேரங்களும் முடிந்ததும் அவசரமாக டெல்லிக்கு வரச் சொல்லி தகவல் வந்து அவரும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளார்.


எவ்வவவுதான் தீவிரமான அமைப்பாக இருந்தாலும் பாட்டாளி வர்க்கத் தலைமையில்லாத இத்தகையமுதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ வர்க்கத்தலைமைகள் தமது ஊசலாட்டம் காரணமாக சமரச சரணாகதிப் பாதையில் சறுக்கி விழவே செய்யும்; பாசிசகும்பலின் குறுகிய நோக்கங்களுக்காக தமது சொந்தமக்களை பலிகொடுத்து துரோகமிழைக்கவே செய்யும் என்பதை மீண்டும் நிருபித்துக் காட்டியுள்ளது திரிபுரா சமரச ஒப்பந்தம். ●

காலில் விழாத குறையாகமுற்றாகசரணடைந்து ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் 'திரிபுராமலைவாழ்மக்கள் தேசியசேவகர் படை'TNV தலைவர் விஜய்குமார்ஹராங்கவால்.



படிப்பகம்

www.padippakam.com



# இந்திய இராணுவத்துக்குள்...

## லஞ்ச ஊழல்
## பதவிச் சண்டை
## அதிகார முறைகேடுகள்

1989 பொதுத் தேர்தல்களில் இந்திராவின் வாரிசு பாசிச ராஜீவ் பெருந் தோல்வியை சந்திக்க வேண்டி வரும் என்று பய பீதியில் இப்போது தவிக்கிறது. ஆனால் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கு இந்திரா செய்யத் தவறிய சில முன்னேற்பாடுகளை அவரது வாரிசு ராஜீவ் செய்யத் துவங்கிவிட்டார். அவற்றுள் மிக முக்கியமானது: இராணுவத் தலைமையில் தனக்கு வேண்டிய நபர்களை நியமிப்பது; இராணுவத் தலைமையையும் நாடாளுமன்ற அரசியலுக்குள் இழுத்துப் போடுவது; லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள், பதவிச் சண்டை ஆகியவற்றை அதற்காகப் பயன்படுத்துவது.

எந்த நாட்டு அரசியலிலும் இராணுவம்தான் மிகவும் உயிராதாரமான உறுப்பு. இராணுவத்தை யார் கட்டுப்படுத்துகிறார்களோ அவர்கள்தான் இறுதியாகப் பார்க்கப்போனால் அரசியல் அதிகாரத்தை வகிக்கவும் ஆதிக்கம் செலுத்தவும் முடியும். நாடாளுமன்ற அரசியல் போட்டி தகராறு 'ஜனநாயக முறை'களில் தீர்க்கவே முடியாமற் போகும்போது இராணுவம் எந்தப் பிரிவை ஆதரிக்கிறதோ அவர்கள்தான் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும். அல்லது போட்டி தகராறுகளில் ஈடுபட்டிருக்கும் பிரிவுகள் எல்லாவற்றையுமே தூக்கி எறிந்துவிட்டு இராணுவமே அதிகாரத்தைக் கைப்பற்றும். மக்கள் போராட்டம்—எழுச்சிகள் அடக்க முடியாத அளவு முன்னேறும்போதும் இராணுவமே அதிகாரத்தைக் கைப்பற்றுவதும் உண்டு.

எப்படிப் பார்த்தாலும் இறுதியாக துப்பாக்கிகள் ஏந்திய ஆயுதப் படையே—இராணுவமே அதிகாரத்தைத் தீர்மானிக்கும் உண்மையான சக்திவாய்ந்தது. மற்றபடி நாடாளுமன்ற ஜனநாயக நாடகமெல்லாம் தற்காலிகமானவை; பெயரளவிலானவை; போலியானவை. இதைத்தான் கீழ்க் கோடியிலுள்ள கொரியா—பிலிப்பைன்ஸ் முதல் மேலைக் கோடியிலுள்ள சிலி—பெரு ஆகிய நாடுகள் வரை நிரூபிக்கின்றன.

**ஆனால் இந்திய நாடோ, இந்திய இராணுவமோ அப்படிப்பட்டவை அல்ல; விதி விலக்கானவை; அப்படி எதுவும் இங்கே நடக்காது** என்று இங்கே பல ஆண்டுகளாகப் புளுகி வருகிறார்கள். இந்திய இராணுவம் அரசியலுக்கு அப்பாற்பட்டது; தேச பக்தியும் விசுவாசமும் மிக்கது; மாசு மருவற்றது; புனிதமானது. எனவே அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது, முயன்றாலும் அது முடியாதவாறு முப்படைகளையும் பிரித்துக் கட்டுப்படுத்தப்படுகிறது என்றெல்லாம் பிரமையூட்டப்படுகிறது; உறுதியளிக்கப்படுகிறது.





...ற்கோவிலின் மீது இராணுவ அதிரடித் ...க்குதல் நடத்தி சீக்கியர்களை படுகொலை ...ய்வதற்குத் தலைமையேற்றவர்கள் ...வைத்யா, சுந்தர்ஜி. தளபதி சர்மா.

உண்மையோ வேறுவிதமானது. காலனிய ஆதிக்க விரிவாக்கத்துக்காக நாடு பிடிக்கவும், தேசிய ஒடுக்கு முறைக்கும் வேண்டி ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகளால் உருவாக்கப்பட்டது இந்திய இராணுவம். அதன் தலைமை இன்னமும் ஏகாதிபத்திய அடிமை—விசுவாசத்தில் ஊறிக் கிடக்கிறது. காலனியப் பண்பாட்டை காத்து வருகிறது. கீழ்மட்ட இராணுவ வீரர்களும் அதே பாணியில் வளர்க்கப்படுகிறார்தள். இருந்த போதும் இவர்களின் பூர்வீகம் வேறு—உழைக்கும் மக்களின் பிள்ளைகள்; அடிமைத்தமான வாழ்வுக்கு எதிராகவும், தேசிய உணர்வும் மிக்கவர்கள். 1857 முதல் சுதந்திரப் போரில் இருந்து 1946 கடற்படை எழுச்சிவரை பல கலகங்களை நடத்திய பாரம்பரியமிக்கவர்கள்.

இராணுவத்தைப் பற்றி ஆட்சியிலுள்ளவர்கள் வளர்க்கும் பிரமையை அவர்களே தகர்த்துவிடும், இராணுவத்தைக் கண்டு அவர்களே அஞ்சி நடுங்கும் காலம் வந்து விட்டது. அதற்குச் சான்றாக சென்ற ஆண்டு ஆகஸ்டில் ஒரு சம்பவம் நடந்தது. தளபதி சுந்தர்ஜியைச் சந்திப்பதற்கு அரசுத் தலைவர் ஜெயில்சிங் அழைத்திருந்தார். அப்போது பிரதமர் அரசுத் தலைவர் மோதல் உச்ச நிலையிலிருந்தது. எனவே சுந்தர்ஜி ஜெயில்சிங்கை சந்திக்கப் போவதாக உளவுப்படை செய்தி சொன்னதும் ஏதோ சதி நடக்கிறது ஏன்று கருதிய பாசிச ராஜீவுக்குத் தொடை நடுக்கம் ஏற்பட்டுப் போனது. இராணுவத்தின் கடற்படை, விமானப்படை ஆகிய மற்ற தளபதிகளும் சந்திக்கிறார்

படிப்பகம்

www.padippakam.com

களா என்று உளவறிய உத்திரவு போட்டார் பிரதமர்.

வடகிழக்கிந்திய நிலைமை பற்றிக் கேட்டறியவே ஜெயில்சிங் சுந்தர்ஜியை அழைத்திருந்தார். ஆனால் ஆட்சிக் கவிழ்ப்பு நடக்கப் போகிறது என்றஞ்சிய பிரதமர் ராணுவத்தின் வடக்கு ஆணையகத்தின் மீருட்டில் இருந்து மேற்கு ஆணையகத்துக்குத் துருப்புகளைக் கொண்டுபோவது என்று முடிவு செய்தார். அதே சமயம் பல மாதங்கள் கிடப்பில் போட்டிருந்த முடிவாகிய இராணுவ அதிகாரிகளுக்குத் தாராளமான சம்பள உயர்வும் சலுகைகளும் அறிவிக்கப்பட்டன.

பாசிச ராஜீவ் அஞ்சியபடி ஆட்சிக் கவிழ்ப்பு நடக்கவில்லை தான்! ஆனால் நிலைமை எந்த அளவு முற்றியிருக்கிறது என்பதை அந்தச் சம்பவம் காட்டியது. இதற்கு என்ன காரணம்? இராணுவத்துக்குள்ளும் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் அராஜகம், அதன் இழிந்த இறுதி நிலையான பொறுக்கி அரசியல் தகராறு பிரதிபலிக்கிறது. அதாவது அதிகாரத்துக்கான ஓட்டுக்கட்சிக் கும்பல் போடும் சண்டையிலிருந்து இராணுவத்தை ஒதுங்கியிருக்க விடவில்லை. குறிப்பாக ஆட்சியில் இருக்கும் பாசிச ராஜீவ் கும்பல் தனக்கு விசுவாசமாகவும் பங்காளியாகவும் இருக்கும் நபர்களுக்கு பதவி உயர்வு அளித்து இராணுவத் தலைமைக்குக் கொண்டுவருகிறது. அவ்வாறு இல்லாத நபர்களைப் பழிவாங்கி வெளியேற்றுகிறது.



ஏற்கனவே லஞ்ச ஊழல், அதிகார முறைகேடு, பதவிச் சண்டை ஆகிய சாக்கடையில் சிக்கி நெளிகிறது இந்திய இராணுவம். குறிப்பாக பதவி நியமனங்கள் பதவி உயர்வுகளில் கடுமையான நாய்ச்சண்டையே நடக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் 15000 இராணுவ அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு தரப்படுகிறது. முப்படைகளின் தளபதிகளைக் கொண்ட குழு இதற்கான சிபார்சுகளைச் செய்கிறது. பிறகு முப்படைகளின் கூட்டுக் குழுவோ, இராணுவ அமைச்சக அதிகாரிகளோ அவர்களைப் பரிசீலித்துப் பரிந்துரைகளுடன் இராணுவ மந்திரிக்கு அனுப்புகின்றன.

கோப்புகள் நகரும் ஒவ்வொரு மட்டத்திலும் லஞ்ச ஊழல், அதிகார முறைகேடு, சிபார்சு—செல்வாக்கு ஆகியனவே தீர்மானிக்கின்றன. கோப்புகள் நகரும் போதே திருத்தங்கள், இடைச் செருகல்களும் நடக்கின்றன.

தரைப் படையில் மட்டும் வாரத்துக்கு 25 புகார்கள் வருகின்றன. ஆண்டுக்கு 8000 புகார்கள் விசாரிக்கப்படுகின்றன. இதனால் வெறுப்புறும் அதிகாரிகளில் பலர் ராஜினாமா செய்துவிட்டுப் போய் விடுகிறார்கள் அல்லது வழக்குமன்றங்களுக்குப் போகிறார்கள். 1982இல் மட்டும் 4000 அதிகாரிகள் வேலையை விட்டு விட்டு ஓடிப் போனார்கள். பலருடைய ராஜினாமா நிராகரிக்கப்படுவதால் வேறு வழியின்றி வழக்குமன்றத்திற்குப் போகிறார்கள். தினசரி ஒரு வழக்கு வீதம் உச்ச நீதிமன்றத்துக்கே போகிறது.

இன்றைய இந்திய இராணுவத் தலைமையின் யோக்கியதையைப் பறைசாற்றும் வழக்கு ஒன்று குஜராத்—பரோடா நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கிறது. தரைப் படைத் தளபதி உட்பட இராணுவ உயர் அதிகாரிகளுக்கு எதிராக மேஜர் சந்த்குமார் வழக்குத் தொடுத்துள்ளார். லெஃப்டினன்ட் கர்னல் பிரிதிவிராஜ பஜாஜ் என்கிற அதிகாரியின் லஞ்ச ஊழல் மோசடிகள் மற்றும் அதிகாரமுறைகேடுகளுக்கு எதிராக மேஜர் சந்த்குமார் உயர் அதிகாரிகளிடம் புகார் கொடுத்திருந்தார். பஜாஜை இராணுவக் கோர்ட்டில் விசாரிக்கும்படி பரோடா நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. ஆனால் புகாரை விசாரித்து தண்டிப்பதற்கு பதில் புகார் கொடுத்த மேஜர் சந்த்குமார் பழிவாங்கப்பட்டு வேலை இழந்தார். வெளியில் அரசியல் ரீதியிலும், இராணுவ உயர் அதிகாரிகளிடமும் பஜாஜுக்கு உள்ள "செல்வாக்கு" தான் இதற்குக் காரணம். வெறுப்படைந்த சந்த்குமார் இராணுவத் தலைமைக்கு எதிராகவே வழக்குத் தொடுத்துள்ளார்.

இந்த வழக்கில் குறுக்கிட்டு சாட்சி சொல்ல—வழக்காட அனுமதிக்கும்படி சந்த்குமாரின் சகா மேஜர் அஜாயாப் சிங்பூரி ஒரு மனுக் கொடுத்துள்ளார். நீதியை நிலை நாட்டுவதத்காகப் பல தகவல்களைத் தான் தரமுடியும் என்று அந்தமனுவில் அவர் கூறியுள்ளார். "இராணுவத்திலுள்ள உயர் அதிகாரிகள் எவ்வளவு லஞ்ச ஊழல் பேர்வழிகள், நேர்மையற்றவர்கள், அவர்களுக்கு உடந்தையாக செயல்பட மறுக்கும் கீழ்நிலை அதிகாரிகளை எப்படித் துன்புறுத்துகிறார்கள் அவமானப்படுத்துகிறார்கள், பழி வாங்குகிறார்கள்" என்பதற்கு மேஜர் சந்த் குமாருக்கு நேர்த்த அனுபவங்களைக் கொண்டு நிருபிக்க முடியும் என்கிறார் பூரி.

லஞ்ச ஊழல் பேர்வழியும், அயோக்கியனுமான பஜாஜைப் பாதுகாப்பதற்காக தமது உயர் பதவியைத் துரோகத்தனமாக முறைகேடாகப் பயன்படுத்தியவர்களின் பட்டியலைத் தருகிறார் மேஜர் பூரி. கொலை செய்யப்பட்ட முன்னாள் தளபதி ஜெனரல் ஏ. எஸ். வைத்யா, முன்னாள் தளபதி ஜெனரல் சுந்தர்ஜி, ஜெனரல் டி. எஸ். ஓபேராய், துணை ஜெனரல்கள் ஆர். எஸ். தயாள் மற்றும் திமீன்தர் சிங் ஆகியோர் அந்தப் பட்டியலில் அடங்குவர்.

மேஜர் பூரியின் குற்றச்சாட்டுக்கு ஆளான இந்த உயர் தளபதிகள் அத்தனைபேரும் பாசிச ராஜீவ் கும்பலின் நெருங்கிய கூட்டாளிகள். பொற்கோவிலின் மீது இராணுவ அதிரடித் தாக்குதல் நடத்தி சீக்கியர்களைப் படுகொலை செய்வதற்குத் தலைமையேற்றவர்கள் வைத்யா, சுந்தர்ஜி, தயாள் ஆகியோர். போஃபார்ஸ் பீரங்கி பேரத்துக்கு சிபாரிசு செய்தவர்கள் சுந்தர்ஜி, ஒபேராய். ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்தவர் திபீந்தர்சிங். இந்தக்கும்பலைத்தான்பஜாஜுக்கு உடந்தையாய் இருந்து பாதுகாத்தார்கள் என்று மேஜர்பூரி குற்றஞ்சாட்டுகிறார்.



அரசு நிதி ஒதுக்கீட்டில் பெரும்பகுதி ஏறக்குறைய30 சதவிகிதமளவு இராணுவமே தின்று தீர்க்கிறது. அதிலும் பெரும் பகுதி ஆயுத தளவாடங்களை வாங்குவதற்காகவேசெலவாகிறது. பாசிச ராஜீவ் ஆட்சிக்கு வந்த பிறகு 1,5000 கோடி ரூபாய்க்கு ஆயுத பேரங்கள் முடித்தது. இதற்கெல்லாம் குறைந்தது 10 சதவிகிதம் 1500 கோடி ரூபாய் தரகு—கமிஷன்—லஞ்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது. லஞ்சம், கூடுதலான லஞ்சம் பெறுவதற்காக தரக்குறைவான ஆயுதங்களையே வாங்கியிருக்கிறது. இதிலே ஆயுதங்களை சிபாரிசு செய்யும் இராணுவ உயர் அதிகாரிகள் உடந்தையாக இருந்து பங்கு போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த ஓரண்டாக பிரபலமாக அடிபடும் இரு ஆயுத பேர ஊழல்கள் போஃபர்ஸ் பீரங்கிகள் மற்றும் ஜெர்மன் நீர் மூழ்கி கப்பல்கள் வாங்கிய விவகாரம். தரக்

www.padippakam.com

குறைவான ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்கியதில் முறைகேடுகள் நடந்திருப்பதாக பொதுத் தணிக்கை அதிகாரியின் அறிக்கையே ஒப்புக்கொள்கிறது. ஆனால் அதன் விவரங்கள்—இரகசியங்கள் இன்னும் வெளிவரவில்லை. போஃபார்ஸ் பீரங்கி பேர ஊழல்களில் இராணுவத் தலைமை அதிகாரிகளே சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்கிற இரகசியம் வெளிவந்துவிட்டது.

எதிரியிடம் உள்ள ஆயுதங்கள் மற்றும் தாக்குதல் சக்தியை முறியடிப்பதற்கு ஏற்றவகையில் புதிய ஆயுதத் தளவாடங்களைவாங்குவதற்கும் அதன் தரத்தையும் தாக்குதல் சக்தியையும் மதிப்பிட்டு சிபாரிசு செய்வதற்கும் ஆயுதங்கள் மற்றும் தளவாடங்கள் பொது இயக்குனர் என்ற பிரிவு ராணுவத்தில்இருக்கிறது. அதன் துணை இயக்குனராக மாயாதாஸ் என்ற துணைத் தளபதி இருந்தார். பாகிஸ்தான் அமெரிக்காவிடமிருந்து புதிய ரக பீரங்கிகளை வாங்கியதனால் குறைந்தது 30 கி. மீ. தூரத்துக்கு, நிமிடத்தில் குறைந்தது 12 தடவை சுடக்கூடிய பீரங்கியை வாங்குவது என்று இந்திய இராணுவம் 1979 லேயே முடிவு செய்தது.

பொருத்தமான, தரமான பீரங்கியை வாங்குவதற்காக தொழில் நுட்ப மதிப்பீடு செய்யவும், பேரத்தை நடத்தவும் துணைத் தளபதி மாயாதாஸ் தலைமையில் 15 இராணுவ அதிகாரிகளைக் கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டது. இங்கிலாந்து, சுவீடன், ஆஸ்திரியா, பிரான்சு நாட்டு பீரங்கிகளின் மாதிரிகளை வரவழைத்து சோதனைகள் செய்தனர். அப்போதைய துணைத் தளபதியாக இருந்த சுந்தர்ஜி, இராணுவ மந்திரியாக இருந்த வெங்கடராமன் ஆகியோர் தலைமையில் இரு முறை உயர் அதிகாரிகளின் குழுக்கள் 1981 இல் அந்த நாடுகளுக்குப் போய் நேரிலேயே சோதனை செய்து பார்த்தனர்.

கோடி கோடியாய் லஞ்சம் பெற்று வாங்கிய போஃபார்ஸ் பீரங்கிமுதல்முறை 11 கி.மீ, இரண்டாவது முறை 15 கி. மீ தூரமே சுட்டது. இறுதியாகத் திருத்தி அமைக்கப்பட்டும் 21 கி. மீ. தூரமே சுட்டது. சோதனையின் போது பீரங்கிக் குழாய் விரிசல் கண்டுபோனது. இந்த பீரங்கிக்குத் தேவையான கம்ப்யூட்டர்கள், வெடிகுண்டுகள், இழுத்துச் செல்லும் வாகனங்களும் வெவ்வேறு நாடுகளிடமிருந்து வாங்கவேண்டியிருந்தது. விலையும் அதிகம்.

போஃபார்ஸ் பீரங்கியைவிட ஆஸ்திரியா, பிரான்சு நாட்டு பீரங்கிகள் தாக்குதல் சக்தி, தூரம், தகுதி—தரம் அதிகமாகவும் இந்திய இராணுவத்துக்குத் தேவையான அளவும் இருந்தன. விலையும் மலிவு. இவற்றின் விளிம்புத் தோற்றமும் எதிரியின் தாக்குதலுக்கு இலக்காகும் வாய்ப்பு குறைவு. இரண்டிற்கும் தேவையான துணை உறுப்புகள் வெடி மருந்துகளை அவர்களே தரமுடியும். விரைவில் பீரங்கிகளை அப்புறப்படுத்தும் வசதியும் உண்டு. இரண்டிலும்கூட பிரான்சு பீரங்கி ஃஸோஃப்மா தரமானதாக, தகுதியானதாக இருந்தது. தரமும் தகுதியும், தாக்குதல் சக்தியும், மிகக் குறைவான, விலை உயர்ந்த இங்கிலாந்து பீரங்கி ஆரம்பத்திலேயே நிராகரிக்கப்பட்டது.

1982-இல் சுந்தர்ஜி உட்பட இராணுவத் தலைமை முழுவதுமாக பிரான்சு, சுவிடிஷ், பிரிட்டிஷ் பீரங்கிகளை இதே வரிசைப்படி சிபாரிசு செய்தது. 1983-இல் சுந்தர்ஜி மிக உறுதியாக பிரெஞ்சு பீரங்கியை சிபாரிசு செய்தார். 1984-இல் ஆயுதங்கள் தளவாடங்கள் இயக்குனர் துணைத் தளபதி மாயாதாஸ் தலைமையிலான கமிட்டி முதலாவதாக ஆஸ்திரியா பீரங்கியையும், அடுத்து பிரெஞ்சு பீரங்கியையும் சிபாரிசு செய்தார்கள். சுவீடிஷ் போஃபார்ஸ் மூன்றாவது தகுதியே பெற்றது. 1985 இல் இராணுவத் தலைமைத் தளபதி வைத்யா முதலாவதாக பிரெஞ்சு, அடுத்து சுவீடிஷ் போஃபார்ஸ், மூன்றாவதாக ஆஸ்திரிய பீரங்கிகளை சிபாரிசு செய் செய்தார். 1986-இல் சுந்தர்ஜி தலைமைத் தளபதிஆனார். பதவியேற்ற இரண்டாவது வாரத்திலேயே அவரது துணைத் தலைமைத் தளபதி சோமன்னா மூலமாக சுவீடிஷ் போஃபார்ஸ் பீரங்கியே சிறந்தது என்கிற இறுதி சிபாரிசு அறிக்கை அனுப்பினார். அடுத்த மாதத்திலேயே 1700 கோடி ரூபாய்க்கு 400 சுவீடன் போஃபார்ஸ் பீரங்கிகள் வாங்குவது என்கிற ஒப்பந்தம் போட்டார் பாசிசராஜீவ்.

ஆறு ஆண்டுகளாகப் பரிசீலித்து சுந்தர்ஜி பதவியேற்கும் வரை முதல் தரமானது, தகுதியானது, சக்தி வாய்ந்தது, மலிவானது, பொருத்தமானது என்று தீர்மானித்து வைக்கப்பட்டிருந்த பிரெஞ்சு பீரங்கி நிராகரிக்கப்பட்டது. எந்த விதத்திலும் தகுதியோ, தரமோ, சக்தியோ இல்லாத, பொருத்தமற்ற (தேவையான 30 கி. மீ. தூரம் சுடாது, பிற தளவாடங்கள் சுவீடனிடமிருந்து கிடைக்காது, விளிம்புத் தோற்றம் ஆபத்தானது—பெரியது, விலை அதிகமானது) சுவீடிஷ் போஃபார்ஸ் பீரங்கி இரண்டாவது, மூன்றாவது நிலையிலேயே இருந்தது. திடீரென்று முடிவுகள் மாற்றப்பட்டு அவசரமாக பேரம் முடிக்கப்பட்டது.



பதவி உயர்வு மறுக்கப்பட்ட எம்.எம்.சிங்

எஸ்.கே.மேஹ்ரா



சரியாக ஓராண்டுக்குப் பிறகு அதன் இரகசியங்கள் வெளிவந்தன. அதற்குள்ளாக 64கோடி ரூபாய் பாசிச ராஜீவ் கும்பலின் பினாமிகளுக்கு தரகாக—கமிஷனாக—லஞ்சமாக தரப்பட்டிருந்தது. இவ்வளவு பெரிய ஆயுத பேர லஞ்ச ஊழலில் தலைமைத் தளபதி சுந்தர்ஜி, துணைத் தலைமைத் தளபதி சோமன்னா முதற்கொண்டு மேஜர் டி. பி. சிங் வரை இராணுவஅதிகாரிகளுக்கும் பங்கு கிடைத்திருக்கிறது.

பாசிச ராஜீவ் கும்பலின் பிரதான ஊது குழல்—"ஜால்ரா" கல்கத்தா—ஆனந்த பஜார் பத்திரிகை குடும்ப ஏடுகள்—அதன் ஆசிரியர் அக்பரும்—"சண்டே" ஏடும் இதற்காகவே நடத்தப்படுகின்றன. அப்படிப்பட்ட "சண்டே" வார ஏடு சென்ற மாதம் பின் வருமாறு எழுதியுள்ளது.

"● ஆயுத பேரக் கமிட்டியிடம் போவதற்கு முன்பு



படிப்பகம்

www.padippakam.com

சிபாரிசை மாற்றிக்கொள்ளும்படி இராணுவத்தின் மீது நிர்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. அரசியல் வாதிகளிடம் இருந்து நிர்பந்தம் வந்திருக்கிறது. 'நீங்கள் போஃபார்ஸ் பீரங்கிகளை சிபாரிசு செய்வீர்களானால் நாங்கள் உன்னைத் தலைமைத் தளபதியாக்குவோம், அல்லது துணைத் தலைமைத் தளபதியாக்குவோம் அல்லது வேறு ஏதாவது செய்து தருவோம்' என்பது போன்ற நேரடியான சர்வ சாதாரணமானதொரு பேரம் நடந்திருக்கவேண்டும்.உண்மையாகவேமுக்கியமானதொரு நபரிடமிருந்து மட்டுமே அந்த நிர்பந்தம் வந்திருக்க முடியும். அது ராஜீவ் காந்தி அல்லது அருண் நேருவாக இருக்கலாம்.

"• ஆயுத பேரத்தில் தளபதிகள் மற்றும் அரசியல்வாதிகள் சேர்ந்தே சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். இந்த சம்பவத்தில் ஒரு அரசியல்வாதி (லஞ்சத்) தொகையைப் பெற்று ஒரு தளபதியோடு பகிர்ந்து கொண்டு போஃபார்ஸ் பீரங்கியை சிபாரிசு' செய்யும்படி உத்திரவாதமளித்திருக்கிறார். இந்த அடிப்படையில் அருண் நேருவையும் அவரது உறவினரான ஒரு தளபதியையும் பலிகடாவாக்கிவிட்டு ராஜீவ் அரசு தப்பித்துக் கொள்ளமுயன்றது. ஆனால் போதிய ஆதாரங்களை உருவாக்க முடியாமற்போகவேகைவிட்டது" என்கிறது "சண்டே" ஏடு. இதன் மூலம் ராஜீவ் கும்பலும் தளபதிகளுமே இந்த லஞ்ச ஊழலில் சிக்கியிருப்பது தெரிகிறது.

தரங்குறைந்த, தகுதியில்லாத சுவீடிஷ் போஃபார்ஸ் பீரங்கியை சிபாரிசு செய்ய மறுத்து, பிரெஞ்சு பீரங்கியைசிபாரிசுசெய்த கமிட்டிக்குத்தலைவராய் இருந்தவர் ஆயுத தளவாடங்கள் இயக்குநர் துணைத் தளபதி மாயாதாஸ். ஈழப்போரை நடத்தி ஓய்வு பெற்ற திபீந்தர் சிங்கிற்குப் பதிலாக தென் பிராந்தியத்தலைமை ஆணையகத் தளபதியாக மாயாதாஸ்தான் நியமிக்கப்பட்டிருக்கவேண்டும். அதற்கான தகுதியும் உரிமையும் அவருக்கு உண்டு. ஆனால் போஃபார்ஸ் பீரங்கி பேர ஊழலுக்குத் தடையாக இருந்ததால் மாயாதாஸ் பழிவாங்கப்பட்டார். அதிகார முக்கியத்துவமில்லாத தேசிய மாணவர் படையின் (என்.சி.சி.) இயக்குநராகித் தண்டனைப் பதவியில் தள்ளி முடக்கப்பட்டார். அலகாபாத் தேர்தலின்போது போஃபர்ஸ் விவகாரத்துக்காக மாயாதாஸை வானொளி ஒரு மணி நேரத்துக்கு மேல் பேட்டி கண்டது. அதையும் தணிக்கை செய்து முக்கியமான பகுதிகளை வெட்டிவிட்டு இரண்டே நிமிடம் அரசுக்கு ஆதரவான கருத்துச் சொன்னதாக திரித்து ஒளிபரப்பியது. இதற்காக மாயாதாஸ் கண்டனம் தெவித்துள்ளார்.

இதேபோல மேலும் ஒரு உதாரணம் உண்டு. போஃபர்ஸ் பேர ஊழல் புகழ் வின் சத்தாவைத் தரகனாக-ஏஜெண்டாகக் கொண்டு 1976இல் இத்தாலியக் கம்பெனி ஒன்றிடமிருந்து 36 கோடி ரூபாய்க்கு ஏவுகணைப் படகுகள் வாங்குவதற்கு ஒப்பந்தம் கையெழுத்தானது. அந்த ஏவுகணை படகுகளின் தரம் சோதித்து அனுப்புவதற்காக கமாண்டர் பி. வி. நய்யார் இத்தாலிக்கு அனுப்பட்டார். நய்யாருக்கும் இந்திய கடற்படை ஆயுத சோதனை இயக்குநரகத்துக்கும் ஏஜெண்ட் வின் சத்தாவின் தொலைத் தகவல் சாதனத்தின் மூலமே தொடர்பு. இதை நய்யார் ஆட்சேபித்து இந்தியத் தூதரகத்தைப் பயன்படுத்தக் கோரியதும் நிராகரிக்கப்பட்டது.

ஏவுகணைப் படகுகளின் தரக் குறைவு பற்றிப் பலமுறை நய்யார் புகார் கூறியும் ஏஜெண்டின் தலையீடு காரணமாக கடற்படைத் தலைமை அதையே வாங்கும்படி நிர்ப்பந்தித்தது. ஏவுகணைப் படகு பேர ஊழலுக்கு தடையாக இருந்த நய்யார் ஒருமுறை தூதரக தொலைத் தகவல் சாதனத்தைப் பயன்படுத்தியதற்காக சிவிலியன்களுக்கு இராணுவ விவகாரம் தெரிய வாய்ப்பு ஏற்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டி ஒழுங்கு நடவடிக்கை எடுத்தனர். முதலில் நீக்க உத்தரவுபோட்டு மேல் முறையீடு காரணமாக அதை விலக்கிக் கொண்டனர். ஆனால் பதவி உயர்வு மறுக்கப்பட்டது. பலமுறை, பல மட்டங்களில் முறையீடுகள் செய்த நய்யாரின் கோப்பு காணாமல் போய்விட்டதாக அவற்றை நிராகரித்தனர். பிறகு திடீரென்று சென்ற ஆண்டு ஆரம்பத்தில் அவர் மீது புதிய பொய்யான குற்றச்சாட்டுகளை கடற்படைத் தலைமை வீசியது. கடைசியாக நீதிமன்றத்துக்குப் போவது என்று நய்யார் முடிவு செய்துள்ளார்.

இப்படி ஆயுதபேர லஞ்ச ஊழலுக்கு உடந்தையாக இருந்து தரக் குறைவான ஆயுத தளவாடங்களை சிபார்சு செய்ய மறுக்கும் இராணுவ அதிகாரிகள் பழிவாங்கப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல, அரசியல் மற்றும் இராணுவத் தலைமைக்கு வேண்டிய நபர்களுக்குப் பதவி நியமனம், பதவி உயர்வு தருவதற்காக இராணுவ விதிகள் எல்லாம் மீறப்படுகின்றன. நியாயமான, தகுதியான பதவி உயர்வு மற்றும் நியமனம் பெறும் உரிமை உடைய அதிகாரிகள் முடக்கப்படுகின்றனர். கட்டாய ஓய்வில் போகும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். கீழ்மட்டத்தில் சர்வ சாதாரணமாக நடக்கும் இந்த அதிகார முறைகேடு இப்போது மேல்மட்டத்துக்கும் உயர்ந்து பதவிச் சண்டையாக வெடித்துள்ளது.



பிரிகேடியர் மன் மோகன் சர்மா. 30 ஆண்டுகள் இராணுவ 'சேவை' செய்தவர். அதில் 10 ஆண்டுகள் உயரமான இமயமலையில் பணியாற்றி சர்வதேச விருது பெற்றவர். இராணுவம் சம்பந்தமாக 15 புத்தகங்கள் எழுதி உள்ளார். 1984 ஆகஸ்டில் மேஜர் ஜெனரலாக பதவி உயர்வு பெற வேண்டியவர். ஆனால் அது மறுக்கப்பட்டது. "இராணுவத்தில் நீடிக்கத் தகுதி இல்லாத நீங்கள் நான்கு மாதத்தில் ஓய்வு பெற வேண்டும்" என்று தாக்கீதுதான் வந்தது. நடந்தது என்ன?

இராணுவத் தேர்வு வாரியம் பதவி உயர்வு மற்றும் நீட்டிப்புக்காக அவரது பெயரை சிபார்சு செய்திருந்தது. ஆனால் இடையில் புகுந்த இராணுவ அமைச்சரக மட்டத்தில் சர்மாவோடு இன்னொருவரின் பெயரையும் அடித்துவிட்டு வேறு மூன்று அதிகாரிகளின் பெயர்களைப் புதிதாக சேர்த்துக் கொண்டது. இந்த முறைகேட்டுக்கு எதிராக நீதிமன்றத்தில் சர்மா வழக்குத் தொடுத்தார். வழக்கின்போது அரசு சார்பாக காட்டிய இரண்டு பொய்யான ஆதாரங்களும் நிரூபிக்கப்பட்டு சர்மாவுக்கு சாதகமாக அசாம் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மறு பரிசீலனை செய்து சர்மாவுக்கு பதவி உயர்வு அளிக்கும்படி இராணுவ மந்திரியிடம் கோப்பு போனது. பதவி உயர்வுக்குப் பதில் மீண்டும் வழக்குத் தொடுத்தது அரசு. அதிலும் பொய்யான தகவல்கள் தரப்பட்டனவென்று நிரூபிக்கப்பட்டது. இராணுவ சிபாரிசு கமிட்டியின் விவாதக் குறிப்புகளைத் தர அரசு மறுத்தது. ஆனாலும் இராணுவ விவகாரம் என்பதால் சர்மாவின் பதவி உயர்வு மறுப்பை ஏற்பதாகவும் கட்டாய ஓய்வு உத்திரவை மட்டும் நிறுத்தி வைப்பதாகவும் தீர்ப்பளிக்கப்பட்டது. சர்மா உச்ச நீதிமன்றத்திடம் மேல் முறையீடு செய்தார். அங்கே வழக்கை விசாரித்த பாசிச ராஜீவின் பாதந்தாங்கியும் ஃபேர்ஃபாக்ஸ் விசாரணைக் கமிஷன் புகழ் பெற்றவர்களுமான தாக்கர், நடராஜன் ஆகியோர் சர்மாவுக்கு எதிராகத் தீர்ப்பளித்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

இருந்தாலும் மனந்தளராத சர்மா இராணுவத்தில் நிலவும் அதிகார முறைகேட்டிற்கு எதிராக தொடர்ந்து போராடப் போவதாகக் கூறி சத்தியாக்கிரகத்தைத் தொடங்கியுள்ளார்.

ஆனால் இதற்கெல்லாம் பாசிச ராஜீவ் கும்பல் அசைந்து கொடுக்குமா என்ன? தற்போது இராணுவத்தின் உச்ச மட்டத்திலேயே இத்தகைய கை வரிசையைக் காட்டத் தொடங்கிவிட்டது. சென்ற மாதம் ஓய்வு பெற இருந்த விமானப்படைத் தலைமை தளபதி லா ஃபோன்ஸன் இடத்திற்குஏர்மார்ஷல்ராகவேந்திரனை நியமிப்பதற்கு அரசுத் தலைவர் வெங்கடராமன் முயன்றார். ஆனால் அவரது பணிக்காலத்தை ஓராண்டு நீட்டித்தால்தான் அது சாத்தியம்.அதுமுடியாமற்போகவே ராகவேந்திரன் ஆறுமாதங்களுக்கு முன்பு ஓய்வு பெற்றார். புதிய தலைமைத் தளபதியாக மூப்பு மற்றும் தகுதி அடிப்படையில் உரிமை உடையவர் ஏர்மார்ஷல் எம்.எம்.சிங்— இவர் ஒரு சீக்கியர். ஆனால் மதத்தைப் பின்பற்றக் கூடியவர் அல்ல.

ஏர்மார்ஷல் எம்.எம்.சிங்குக்கு பதவி உயர்வு தருவதற்கு பதிலாக அவரைவிடத் தகுதியும் மூப்பும் குறைவான எஸ்.கே. மேஹ்ரா விமானப்படைத் தளபதி ஆக்கப்பட்டுள்ளார். மேஹ்ராவுக்குப்பதவி உயர்வு தருவதால் அவருக்குப் பிறகு நேருவின் சாதியைச் சேர்ந்த எஸ்.கே. கவுல் தளபதி ஆகவும், அவருக்குப்பிறகு மத்திய மந்திரி சந்தோஷ் மோகன் தேவினுடைய உறவினர் பி.கே. தேவும் தளபதி ஆகவும் வர முடியும். அதற்குள் இடையில் உள்ள மூத்த அதிகாரிகள் ஓய்வு பெற்றுப் போய் விடுவார்கள். இராணுவப் பதவி உயர்வு விதிகளின்படியான கணக்கு அப்படித் தெரிவிக்கிறது.

எம்.எம்.சிங்குக்குப் பதவி உயர்வு மறுக்கப்பட்டதற்கு அரசு பரப்பிவிட்ட காரணம் முப்பது ஆண்டுகளாக மனைவியைப் பிரிந்து வேறொரு பெண்ணோடு வாழ்க்கை நடத்துகிறார் என்பதாகும். ஆனால் அவருக்கு 'இந்துஸ்தான் ஏரோ நாட்டிக்ஸ்' என்னும் விமானம் கட்டும்ஆலைத் தலைமைப் பதவி தருவதாக அரசு கூறியது. அதை மறுத்ததோடு விமானப்படையிலிருந்தே சிங் விலகிக் கொண்டார்.

"விலகிக் கொள்ளும்படி தளபதி லா ஃபோன்ஸன் மூலமாக அரசு நிர்ப்பந்தித்தது;கடந்த பத்து ஆண்டுகளாக ஒரு பெண்ணோடு நான் வாழ்வது அரசுக்குத் தெரியும். அப்பொழுதெல்லாம் பதவி உயர்வு கொடுத்தனர். நான் சீக்கிய மதத்தையும் ஜாட் ஜாதியையும் சேர்ந்தவன் என்பதால் இப்போது பதவி உயர்வு தரவில்லை என்கிறார்கள். ஆனால் நான்அரசியல் நம்பிக்கை யோசீக்கிய மத நம்பிக்கையோஇல்லாதவன்." என்று புலம்புகிறார் சிங்.

"நான் தரைப்படையுடன் நெருக்கமான சிநேகம்உள்ளவன். அரசு அதை விரும்பவில்லை. தரைப் படையும் விமானப்படையும் சிநேகமாக இருப்பதுபாதுகாப்பானது அல்ல என்று அரசு கருதுகிறது. எனவேதான் எனக்குப் பதவி உயர்வு கொடுக்கவில்லை என்று கூறப்படுகிறது" என்று குற்றஞ்சாட்டுகிறார் சிங்.

பாசிச ராஜீவின் தாய்இந்திராவின் ஆட்சியிலேயும் 1983ல் இப்படித்தான் தரைப்படைத் தளபதி எஸ்.கே. சின்ஹாவுக்கு பதவி உயர்வு தரமறுத்துகீழ்நிலையில் இருந்த வைத்யா தலைமைத் தளபதி ஆக்கப்பட்டார், எஸ்.கே. சின்ஹா, இராணுவத்திலிருந்தே ராஜினாமா செய்துவிட்டுகாங்கிரசு எதிர்ப்பு அரசியலில் குதித்தார். அரசியல் ஈடுபாடு காரணமாக பதவி உயர்வு தரவில்லை என்று பொதுவாகக் கூற முடியாது. தளபதிகளாக இருந்து ஓய்வு பெற்ற கே.வி. கிருஷ்ணா ராவ் (இப்போது நாகலாந்தில் இந்திரா காங்கிரசுக்கு ஊழியம் செய்பவர்) லத்தீஃபி போன்றவர்கள் கவர்னர் பதவி பெறவில்லையா?

இராணுவத்துக்குள் உள்ள லஞ்ச ஊழல், அதிகார முறைகேடு பதவிச் சண்டை இராணுவ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் பணியாற்றும் விஞ்ஞானிகள் மத்தியிலும் பரவுகிறது. ஏ.கே. தத்தா, மற்றும் ஐ.எஸ். காபா ஆகிய இரு விஞ்ஞான அதிகாரிகள் திடீரென்று முறைகேடாகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்கள்; இந்த ஆண்டு மட்டும் 900 கோடி ரூபாய் அளவு செலவு செய்யும் பல திட்டங்கள் தேங்கி, நிதி விரயமாக்கப்படுகிறது. இவற்றுக்கு எதிராக சில இராணுவ விஞ்ஞானிகள் "போர்க் கொடி" தூக்கியுள்ளனர். நாடாளுமன்றத்துக்கோ, நீதிமன்றத்துக்கோ விவகாரத்தைக் கொண்டு போகத் தீர்மானித்துள்ளனர்.

இராணுவம் தேசத்தின் பாதுகாப்புக்கு உயிராதமானது; எனவே அதன் விவகாரங்களை அறிந்து கொள்ளவோ, விவாதிக்கவோ நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கேகூட உரிமை கிடையாது; இராணுவத்தின்மீது புகார் கூறுபவர்கள் தேசதுரோகிகள்; அது புனிதமானது—என்கிற ஒருபெரிய இரும்புத் திரையையே போட்டுள்ளார்கள். எதிர்க் கட்சிகளும்அதை ஏற்றுக் கொண்டு இராணுவத்துக்குள் நடக்கும் லஞ்ச ஊழல், அதிகார முறைகேடு, பதவிச் சண்டைகளைக் கேள்விக்கு இடமின்றி சகித்துக் கொள்கின்றன.

ஆனால் இராணுவ இரகசியம் என்பதெல்லாம் இராணுவ மற்றும் அரசியல் தலைமையின் அயோக்கியத்தனங்களை மூடி மறைக்கத்தான் பயன்படுத்தப்படுகிறது. இராணுவத்துக்குள்ளேயே உளவாளிகள் இருப்பதும், இந்திய இராணுவ இரகசியங்கள் எதிரிகளுக்கும் ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கும் முழுக்கவும் தெரியும் என்பதுதான்நிலைமை. இதற்கெல்லாம் உச்சகட்டமாக சென்ற மாதம்புதுடெல்லிஇராணுவத்தலைமையகத்துக்குள் புகுந்து200க்கும் மேற்பட்ட கோப்புகள் திருடப்பட்டுள்ளன. அவற்றில்50 கோப்புகள் போபார்ஸ் சம்பந்தமானவை என்று பத்திரிக்கை செய்திகள் கூறுகின்றன• "கோப்புகள்திருட்டுப் போனது உண்மை. 200 கோப்புகள் அல்ல, 75தான்; போபார்ஸ் கோப்புகளோ, வேறு முக்கிய கோப்புகளோ திருடு போகவில்லை. இராணுவவாகனங்கள் சம்பந்தப்பட்ட—முக்கியத்துமற்ற கோப்புகள்தான் திருடு போயின" என்று இராணுவ மந்திரி ஒப்புக் கொண்டுள்ளார்.

தேசத்தையே பாதுகாப்பதாகக் கூறிக் கொள்ளும் இராணுவத்தின் தலைமைச் செயலக கோப்புகளையே பாதுகாக்கமுடியவில்லையாம்! முக்கியத்துவமற்ற கோப்புகள் திருடு போயின என்றால் பழைய பேப்பர் கடையில் போடவா எடுத்துப் போனார்கள்? உண்மை என்னவென்றால் பாசிச ராஜீவ் கும்பலோ, அந்நிய உளவாளிகளோதான் திட்டமிட்டு இராணுவக் கோப்புகளைத் திருடி உள்ளது. விவகாரத்தைப் பெரிதுபடுத்த வேண்டாம் என்று கோரிய பாசிச ராஜீவ் கும்பல் அப்படியே அமுக்கிவிட்டது.

ஆக, லஞ்ச ஊழல், அதிகார முறைகேடு, பதவிச் சண்டையில் கிக்கியுள்ள இந்திய இராணுவம் பாசிச ராஜீவ் கும்பலின்கூட்டாளியாகி அல்லது தானே முழு அதிகாரத்தையும் கைப்பற்றிக் கொண்டு மக்களுக்கு எதிராகப் பாயும் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. எனவே இந்த இராணுவம் தேசத்தைப் பாதுகாக்கும் என்கிற பிரமைகளைக் கலைந்துவிட்டு, இந்த இராணுவத்திடமிருந்து தேசத்தையும் தம்மையுமே காத்துக் கொள்ள மக்கள் தயாராக வேண்டும். ●




ஆர்.கே



படிப்பகம்

www.padippakam.com

இந்தியாவின் 'சுதந்திர'த்திற்குப் பிறகு ஏற்பட்ட விபத்துகளில் நடந்த மிகப் பெரும் ரயில் விபத்து என்று வர்ணிக்கப்பட்ட கேரளத்தில் நடந்த ஐலேண்ட் எக்ஸ்பிரஸ் ரயில் விபத்து இது. '400க்கும் மேற்பட்ட பயணிகள் ஏரியில் மூழ்கிய ரயில் பெட்டிகளில் சிக்கி உயிரிழந்தனர். 1000க்கும் மேற்பட்டவர்கள் ரத்தக் காயங்களுடனும் உடல் ஊனத்துடனும் உயிர் தப்பினர். பெருந்திரளான பகுதி வாழ் மக்களின் குறிப்பாக மீனவர்களின் உடனடி உதவி மட்டும் இல்லாதிருந்திருக்குமானால் விபத்தின் கோரம் இன்னும் கொடூரமானதாக இருந்திருக்கும். ஆட்சியாளர்களே ஒத்துக் கொண்ட உண்மை இது.



ஆனால் அரசு எந்திரமும் ஆட்சியாளர்களும் விபத்தின் விபரத்தை தெரிந்த பிறகும் நத்தை வேகத்தில்தான் செயல்பட்டனர். விபத்தில் சிக்கியவர்களுக்கு முதலுதவி அளிக்கவோ, மருத்துவமனை எடுத்துச் செல்லவோ அரசு தரப்பில் கடைசி வரையில் போதுமான வாகன வசதிகள் கூட செய்து தரப்பட வில்லை. அவ்வழியே சென்ற தனியார் வாகனங்கள்தான் அதற்கும் பயன்பட்டது. உடனடியாக மட்டுமல்ல, பலமணி நேரங்கள் உருண்டோடிய பிறகும், மீட்புப் பணிக்கு போதுமான மின்சார விளக்கு வெளிச்சத்திற்கு கூட அரசு ஏற்பாடு செய்யவில்லை.

இதோ இது ஜூன் மாதம் 19ந் தேதி—ஏறக்குறைய ரயில் விபத்து நடந்த அதே காலத்தில்—டில்லி பாலம் விமான நிலையத்தில் நடந்த விமான விபத்து இது. மின்னல் வேகத்தில் விபத்து தடுப்பு பணிகள் முடுக்கி விடப்பட்டு விமானத்திலிருந்த 126 பயணிகளும் எந்த ஒரு சிறு காயமும் இல்லாமல் வெளியேற்றப்பட்டனர்.

பெரும் விபத்து தடுக்கப்பட்டதற்கு காரணம் மிகுந்த உஷார் தன்மை, முன் ஏற்பாடு; அதிநவீன விபத்து தடுப்பு கருவிகள், களப் பணியாளர்கள் என அனைத்தும் ஒருசேர எந்நேரத்திலும் இயங்க தயார் நிலையில்வைக்பட்டிருந்ததால் உடனே உதவியது. வழக்கமாக ஒவ்வொரு பயணத்துக்கு முன்னும்பல நிலைகளில் விமானத்தின் பாகங்கள் சரிபார்க்கப்படுவது, விமான ஓட்டிக்கும் நிலையத்திற்கும் இடையே அதிநவீன தகவல் தொடர்பு. சிபாரிசு செய்யப்பட்ட கால அளவு ஓடிய விமானங்களை உடனே கழித்துக் கட்டுவது. இப்படி ஒவ்வொரு பிரிவிலும் பாதுகாப்புத் தேவைகளை விஞ்ஞான ரீதியாக திட்டமிட்டு தயாராக அமுல்படுத்துவது. இத்தனையும் மீறி விபத்தில் பயணிகள் பாதிக்கப்பட்டால் அதிநவீன மருத்துவ வசதியை பயன்படுத்தி—அதிநவீன தனியார் மருத்துவமனை—இழப்புகளை பெருமளவு குறைப்பது என இங்கு மட்டும் இவ்வளவு வேலைகளையும் இதே அரசு எந்திரமும், ஆட்சியாளர்களும்தான் செய்தார்கள்.

ரயில் விபத்து மட்டுமல்ல, படகு விபத்து, சாலை விபத்து என சர்வ சதாகாலமும் உழைக்கும் மக்களின் உயிர் பறிப்பு. மேட்டுக்குடி மக்களுக்கும் ஆளும் வர்க்க கும்பலுக்கும் பாதுகாப்புவிமான பயணத்தில் மட்டுமல்ல, வாழ்க்கையின் இறுதிவரை சகல அம்சத்திலும் பாதுகாப்பு. அரசியல் சட்டத்திலும் அதற்கு தக்க ஏற்பாடு.

சட்டம் எல்லோருக்கும் பொதுவானதென்றும், அரசும், அரசு எந்திரமும் சகலருக்கும் சமமானதென்றும் பசப்பிக்கொண்டே அடிதட்டு மக்களின் உயிரை அலட்சியப்படுத்தும் இந்த அரசை அடித்து நொறுக்குவதுஎப்போது?

# இதுதான் இன்றைய இந்தியா





படிப்பகம்

www.padippakam.com

# கிழக்கே வீசும் புரட்சிப் பேரலை!

இந்தியாவின் தென்கிழக்கே பிலிப்பைன்சில் மார்க்கோசின் ராணுவ சர்வாதிகாரத்திற்கு எதிராக வீசிய மக்கள் புரட்சிப் புயல் மெள்ள நகர்ந்து இப்போது இந்தியாவின் வடகிழக்கேயுள்ள அண்டை நாடான பர்மாவில் மையங்கொண்டு சுழன்றடிக்கிறது.

'ராணுவ ஆட்சி ஒழிக! ஜனநாயகம் ஓங்குக!' என்ற முழக்கங்கள் விண்ணைப் பிளக்கின்றன. பர்மீய வரலாற்றில் இதுவரை காணாத அளவுக்கு லட்சக்கணக்கில் மக்கள் அணிதிரண்டு ராணுவ ஆட்சிக்கெதிரான ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும் தொடர்கின்றனர். முதலில் மாணவர்களால் மூட்டப்பட்ட இச்சர்வாதிகார எதிர்ப்பு சிறுபொறி இன்று மருத்துவர்கள், வழக்குரைஞர்கள், புத்திஜீவிகள், ஏன், திரைப்பட நடிகர்கள், புத்த பிட்சுக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரையும் அணிதிரட்டிக் கொண்டு பெருநெருப்பாக பற்றி எரிகிறது.

இந்த எதிர்ப்புகளை எதிர்கொள்ள முடியாமல், சோசலிசமும் புத்தமதக் கோட்பாடுகளுமே எனது கொள்கைகள் என்று கூறிக் கொண்டு 26 ஆண்டுகாலம் ஆட்சி நடத்திய, ஒரு கட்சி ராணுவ சர்வாதிகாரியும், சோசலிச திட்டக் கட்சியின் தலைவரும், நாட்டின் அதிபருமான பர்மீய கிழட்டு சர்வாதிகாரி நீவின் பதவியைத் துறந்து ஓடினார். உடனேயே, நாலரை கோடி மக்களின் போராட்டப் புயலை சமாளிக்க நீவின்னின் நெருங்கிய கூட்டாளியான செயின் லெவின் ஜனாதிபதியாக்கப்பட்டார்.

ஆனால் மக்களோ, ஆளுவோரை மாற்றுவதல்ல; ஆட்சி முறையையே மாற்ற வேண்டும் என்று முன்னிலும் தீவிரமாகப் போராடத் தொடங்கினர். தலைநகர் ரங்கூன் மட்டுமின்றி 26க்கும் மேற்பட்ட சிறுநகரங்களிலும் செயின் லெவினுக்கு எதிராகப் போராட்டம் பற்றிப் படர்ந்தது.

ராணுவக்கும்பலின் துப்பாக்கிச் சூட்டுக்கும் கொலை வெறியாட்டத்திற்கும் மக்கள் அஞ்சி நடுங்கவில்லை. கண்மூடித்தனமாக ராணுவம் போராடும் மக்களை நோக்கிச் சுட்ட போதும் கூட, ஆயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்பட்ட போதும்கூட, மாண்டு போனவர்களின் உடலைத் தம் தோள்மீது சுமந்து கொண்டு மக்கள் தொடர்ந்து உறுதியுடன் முன்னேறினர்.

நிராயுத பாணியான மக்கள் போலீசு நிலையங்களையும், ராணுவக் கிடங்குகளையும் சூறையாடி ஆயுதங்களைக் கைப்பற்றினர். அரசு அலுவலகங்களை முற்றுகையிட்டு நிர்வாகப் பணிகளை நிலைகுலைய வைத்தனர். ஆளும் பர்மீய 'சோசலிச' கட்சிக் கொடியை தலைகீழாக அரைக்கம்பத்தில் பறக்கவிட்டு அவமானப் படுத்தினர். மக்கள் போர் தீவிரமானதைத் தொடர்ந்து ராணுவத்திலேயே பிளவும் மோதலும் ஏற்பட்டு ஒரு பிரிவினர் போராடும் மக்களுடன் சேர்ந்து கொண்டனர். அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஆதரிக்கும் ஆளும் கும்பலைச் சேர்ந்த அதிருப்தியாளர்களான ஆங்—கி மற்றும் 12 தளபதிகளை செயின் லெவின் கும்பல் கைது செய்து சிறையிலடைத்தது.



விடாப்பிடியாகத் தொடரும் ஆர்ப்பாட்டத்தை கைவிடா விட்டால் விண்ணிலிருந்து குண்டு வீசப்படும் என்று ராணுவ கும்பலின் ரேடியோ தொடர்ந்து எச்சரித்தும்கூட போராடும் மக்கள் அதை பொருட்டாக மதிக்கவில்லை. மக்களது வெஞ்சினத்தை எதிர்கொள்ள முடியாமல் அரண்டுபோன செயின்லெவின், பதவியேற்ற 17 நாட்களிலேயே ராஜினாமா செய்துவிட்டு அடைக்கலம் தேடி அயல்நாட்டுக்குத் தப்பியோடி விட்டார்.

அடுத்து இப்போது மௌங் மௌங் என்பவர் அதிபராகப்பதவியேற்றுள்ளார். 'இவர் ராணுவத்தைச் சேர்ந்தவரல்ல; சிவிலியன்! சட்டத்துறை வல்லுனர்' என்று கூறி ஒருகட்சி ராணுவ சர்வாதிகாரத்துக்கு முட்டுக் கொடுத்து நிலைநாட்ட ஆளும்கும்பல் முயற்சிக்கிறது. ஆனால் பர்மீய மக்கள் இந்த மழுப்பல்களுக்குச் செவி சாய்க்கத் தயாராக இல்லை. ஜனநாயகத்தை நோக்கி நாடு திரும்பாதவரை எங்கள் போராட்டம் ஓயாது என்று நாடு தழுவியபொது வேலை நிறுத்தத்துக்கு அறைகூவல்விடுத்து ஆர்ப்பாட்டத்தைத் தொடர்கிறார்கள்.

அதேசமயம் ராணுவ சர்வாதிகாரத்துக்கு எதிரான பர்மீய மக்களின் புரட்சிப் போருக்கு வடிகால் வெட்டும் வேலைகளும் நடக்கின்றன. ஒருகட்சி ராணுவ ஆட்சிக்கு மாற்றாக பலகட்சி நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறை வேண்டும் என்று கோரிக்கைகள் வைக்கப்படுகின்றன. ஆனால் இது கரடியை வாசல் புறமாக விரட்டிவிட்டு கொல்லைப் புறமாக ஓநாயை நுழைய விடும் முயற்சிதான்.

ராணுவ ஆட்சிக்கு எதிராக தன்னெழுச்சியாகவும், மாற்று ஆட்சிமுறை பற்றிய தெளிவில்லாமலும் தீவிரமாகப் போராடி வரும் பர்மீய மக்கள், நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மோசடித் தனத்தை விரைவில் உணருவார்கள். பர்மாவின் வடபகுதியில் புரட்சிகர தளப்பிரதேசங்களைக் கட்டி, ஆயுதப் போராட்டத்தில் ஊன்றி நின்று பரந்துபட்ட மக்களின் ஜனநாயகத்துக்காகவும், அதிகாரத்துக்காகவும் போராடி வரும் கம்யூனிசப் புரட்சியாளர்களின் தலைமையில் விரைவில் அணிதிரள்வார்கள். ராணுவ சர்வாதிகாரத்தோடு சேர்த்து நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கும் பாடை கட்டுவார்கள்.

● குமார்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ். மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.
அச்சிடுபவர்: எம்.கே. சாமி, பிரேம் பிரஸ், 107-ஏ, பெரியார் பாதை (மேற்கு), சென்னை-600 094.

படிப்பகம்